# சந்நிதியான்

## அற்புதங்கள்

### பாகம் மூன்று




**ந. அரியரத்தினம்**

**2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலக
யாழ்ப்பாணம்

# சந்நிதியான்

## அற்புதங்கள்

பாகம் மூன்று

ந. அரியரத்தினம்

14037 cc

2012

தொண்டைமானாறு

289485

289485 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
294.5

தலைப்பு :- சந்நிதியான்

விடயம் :- அற்புதங்கள் - பாகம் மூன்று

ஆசிரியர் :- ந. அரியரத்தினம்

பதிப்பு :- முதற்பதிப்பு 2012 (29.08.2012)

பதிப்புரிமை :- ஆசிரியர்க்கு

பக்கம் :- 50

அச்சுப் பதிப்பு :- தமிழ்ப் பூங்கா - நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே... பக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | |
| ஆசியுரைகள் | |
| அணிந்துரை | |
| சந்நிதியான் ஒன்று | 01 - 04 |
| சந்நிதியான் இரண்டு | 05 - 10 |
| சந்நிதியான் மூன்று | 11 - 18 |
| சந்நிதியான் நான்கு | 19 - 23 |
| சந்நிதியான் ஐந்து | 24 - 28 |
| சந்நிதியான் ஆறு | 29 - 31 |
| சந்நிதியான் ஏழு | 32 - 35 |
| சந்நிதியான் எட்டு | 36 - 41 |
| சந்நிதியான் ஒன்பது | 42 - 46 |
| சந்நிதியான் பத்து | 47 - 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே உண்மையான வாழ்க்கையாகும். இத்தகைய நிலைக்கு அடியேனை ஆளாக்கிய எனது தாய், தந்தை இருவருக்கும் இந்நூலை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியில் எழுந்தருளி வேலில் எப்பொழுதும் வெற்றிலை நுனி பதித்திருக்கும்.
அதேபோல எப்பொழுதும் அந்த சிறிய வெள்ளி மயிலில்
வீற்றிருந்து தான் வேலவன் வீதி உலா வருவான்.
அடியார்கள் காண்பதற்கரிதான அந்த அருட்காட்சியை இங்கே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சஞ்சிகையை 1998 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதியான் கருணையுடன் கட்டுரைகளாக தொடர்ந்து இன்றுவரை அடியேன் வெளியீடு செய்து வருவது அடியார்கள் அறிந்ததே.

ஞானச்சுடர் சஞ்சிகையில் வெளிவந்த ஒரு தொகுதிக் கட்டுரைகள் சந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஒன்று என்ற தலைப்பில் ஏற்கனவே ஒரு நூலாக எமது பேரவையால் ஆச்சிரமத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று ஞானச்சுடரில் 2000 ஆம் ஆண்டு வெளிவந்த கட்டுரைகளை உள்ளடக்கி சந்நிதியான் அற்புதங்கள் பாகம் இரண்டு என்ற தலைப்பில் இரண்டாவது நூல் கனடா செல்வச்சந்நதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

ஈழத்து மக்கள் குறிப்பாக வடபகுதி மக்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனை பரம்பரை பரம்பரையாக வழிபாடு செய்து வருபவர்கள். ஆனாலும் கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையால் கடல் கடந்து புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் மட்டுமன்றி எமது நாட்டுக்குள் உள்ளவர்கள் கூட நினைத்த பொழுதில் சந்நிதியானனைச் சென்று வழிபட முடியாத யுத்த சூழ்நிலைகள் இங்கே நிலவியது. இவ்வாறான காலகட்டத்தில் எம்மால் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற இந்த ஞானச்சுடர் சஞ்சிகையும் இதில் சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகளும் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்துவாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்ற உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது எனக் கூறுவதில் தவறில்லை எனக் கருதுகின்றேன்.

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன்தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுத முடிகின்றது என்பதை என்னால் நன்கு உணரமுடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல எமது இருவரது மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் நெருக்கமான தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தான தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ. முருகுப்பிள்ளை அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இவ்வாறு ஏதோ ஒரு பூர்வீக தொடர்பு சந்நிதி ஆலயத்திற்கும் அடியேனுக்கும் உள்ளதை என்னால் உணர முடிகின்றது.

இக்கட்டுரைகளில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் சந்நிதியானது உண்மைச் சம்பவங்கள் என்பதால் உணர்வுகளை மிகைப்படுத்தக் கூடிய சொற்களோ வசனங்களோ இங்கே பயன்படுத்தப்படவில்லை. பாமர மக்களும் வாசிக்கக் கூடியதான இலகுவான இயல்பான சொற்பதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

சந்நிதியானது கட்டுரைகளை தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் வாசகர்களான அடியார்கள் பெருமக்களுக்கும் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்க்கையில் கணிசமான நேரத்தை பயனபடுத்துவதற்கு அனுமதி ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் எனது குடும்பத்தினருக்கும், கட்டுரைகளை எழுதுவதற்கு ஊக்கமளித்து கொண்டிருக்கும் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும்.

இதேபோன்று இந்நூலை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி சூழலில் வெளியிடுவதற்கு எல்லா வகையிலும் உதவிகள் வழங்கிய ஆலய உரிமையாளரும், உற்சவகாலப் பிரதமகுருவுமான ஆ. சிவசண்முகஐயருக்கும், ஆச்சிரமத்தின் சுவாமிகள் செ. மோகனதாஸ் அவர்கட்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலை அழகுற வடிவமைத்து உதவிய எனது மாணவன் எஸ். ஸ்ரீதாசன் அவர்கட்கும், நேர்த்தியாக அச்சுப்பதித்து உதவிய தமிழ்ப்பூங்கா அச்சகத்தினருக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக.

- ஓம் முருகா -

ந. அரியரத்தினம்
பிரதான வீதி,
தொண்டைமானாறு,
இலங்கை.

65 தொன்கிளிப் பார்க்,
ரொறன்டோ, கனடா.
416 - 425 - 4877
29.08.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம்
இரண்டாவது குரமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக - நல்லை
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசிச்செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும், பாடசாலை அதிபராகவும் பேரவையின் வளர்ச்சிக்கு அயராது தொழில் செய்யும் திரு.ந.அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் என்கின்ற தொடர் கதையை எழுதி வெளியிட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்தின் பெருமையை நிலைநாட்டும் பல ஆலயங்களுள் சந்நிதி முருகனுடைய ஆலயம் தனித்துவமானது. உடல்நோய், உளநோய் அனைத்தையும் தீர்க்கும் முருகனாக வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவனாக அன்றும் இன்றும் என்றும் அன்னதானக் கந்தன் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய சிறப்பையும் ஆலய வரலாற்றையும் அறியவேண்டியது அனைவரதும் அவாவாக உள்ளது. ஆதனை ஈடு செய்யும் பொருட்டு திரு.ந. அரியரத்தினம் அவர்கள் மிகவும் தெளிவாகவும் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையிலும் இந்நூலை எழுதிக்கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும். அதனுடன் வெளிவந்த சந்நதியான் வரலாற்றை தனியொரு நூலாகத் தொகுத்து வெளியிடுவது மேலும் சிறப்பிற்குரியது. ஆசிரியர் அரியரத்தினம் அவர்களின் தொண்டு மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நூல் சிறப்பாக வெளிவந்து முருகனுடைய அருள் அனைவருக்கும் கிடைப்பதாக. ஆச்சிரமம் சிறந்து வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி

கலியுகவரதன் கந்தவேள் பெருமான் மருதர் கதிர்காமரை ஆட்கொண்டு உபதேசித்த பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அன்று தொடக்கம் இன்று வரை அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

நடைபெறுகின்ற அற்புதங்களை சம்பந்தப்பட்டவர்கள் தமது உறவினர்களுடனும், சுற்றத்தவர்களுடனும், நண்பர் களுடனும் வாய்மூலம் பகிர்ந்து கொள்வதுண்டு. ஆனால் அதிபர் ந. அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் நிகழ்த்துகின்ற அற்புதங்களை கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தி வருவது ஒரு மகத்தான இறை பணியாகும். இவ்வாறு இந்தப் பணியைச் செயற்படுத்துவதனால் வேறு பிரதேசங்களிலும், வேறு நாடுகளிலுமுள்ள முருகப் பெருமானின் அடியவர்களும் இவற்றை எல்லாம் அறிந்து கொள்வதற்கும் முருகப் பெருமானின் அருளைப் பெறுவதற்கும் வழி ஏற்படுகின்றது. அவருடைய பணி மேலும் தொடர்வதற்கு திருவருள் கிடைப்பதாக.

உற்சவ காலத்தில் இந்த அற்புதங்கள் பாகம் மூன்றை வெளியிடுவதற்கு சந்நிதி வேல் அழகன் முருகன் திருவருள் ஆசி என்றும் நிலைக்க பெருமானை வேண்டி அமர்கின்றேன்.

ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முக ஐயர்
உற்சவகால உரிமையாளரும்,
உற்சவகால பிரதம பூசகரும்,
செல்வச்சந்நதி,
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
குருவே துணை
சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி, அமுதகலாயோகி
திரு.செ. மோகனதாஸ் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

எமது சந்நிதியான் ஆச்சிரம பேரவையினால் கடந்த பன்னிரண்டு வருடங்களாக திங்கள் மலராக வெளியீடு செய்துவரும் ஞானச்சுடர் போற்றுதற்குரிய சஞ்சிகையாக வெளிவருவதற்கு சந்நிதி முருகனதும் குருநாதர் மயில்வாகன சுவாமிகளினதும் பேரருளே காரணமாய் அமைந்துள்ளது என்பதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இச்சஞ்சிகையை நாம் 1998 ஆம் ஆண்டு தை மாதம் வெளியீடு செய்யும் பொழுது ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் சந்நிதியானது திருவிளையாடல்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் எனபதையும் அச்சம்பவங்கள் எல்லாம் உண்மையானவையாகவும் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்ததன பிரகாரம் எங்களுக்கு நேரில் கிடைத்த அனுபவங்கள் மூலமும், பல அன்பர்களுக்கு ஏற்பட்ட முருகனது அருட்கடாசத்தையும் நேரில் கண்டும், கேட்டும், ஞானச்சுடர் சஞ்சிகையில் பிரசுரிக்க முயன்றோம்.

இச் செயல்களுக்கு பேருதவியாக எமது பேரவை செயலாளரும், அதிபரும், மலர்க்குழுவில் ஒருவருமாகிய திரு.ந. அரியரத்தினம் சந்நிதியான் என்ற தொடரில் எழுத ஆரம்பித்தார்கள். ஆரம்ப மலரில் இருந்து இதுவரை வந்த சந்நிதியானின் திருவிளையாடல்கள் போற்றுவதற்குரிய முறையில் எமது மலரில் இடம்பெற்று வருவதனையிட்டு பல அன்பர்களும், அடியவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிலும், கடித மூலமும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்தும் சந்நிதியான் தொடர் வெளிவரவேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள்.

முழுமுதற் கடவுளாய் விளங்கும் சிவபெருமான் அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் புரிந்தார் என்றும் அதனை இன்றும் நாம் 'பெரியபுராணம்' எனும் தொடரின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. அதே வகையில் இச்சந்நிதியான் எனும் தொடர் மிகவும் போற்றப்படக்கூடியது.

இந்நூல் எதிர்கால சந்ததியினருக்கும் கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதற்குரிய அரிய பொக்கிசமாக விளங்கும் என்பது திண்ணம். இத்தொடரை எழுதும் திரு. அரியரத்தினம் அவர்கள் எல்லா நலமும் பெற்றுவாழ சந்நிதி வேலவனை வேண்டி விடை பெறுகின்றோம். –



சந்நிதியின் சித்தர் பரம்பரையினர் இடமிருந்து வலமாக
ஆச்சிரமத்து மயில்வாகனம் சுவாமிகளின் சீடர்,
சோல்பரி பிரபுவின் மகன் ஆனைக்குட்டிச் சுவாமிகள்,
பன்றிக்குட்டிச் சுவாமிகள் (இந்தியா),
சுவாமி கௌரிபாலா (ஜேர்மன் சுவாமி)-1960

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் வீதியுலா புறப்பட்டு வள்ளியம்மன் இருப்பிடத்திற்குச் சென்று வள்ளியம்மனுடன் உடன் இருப்பதும் மீண்டும் தனியாக எழுந்தருளி வருவதும் வழமையான நிகழ்வு. இங்கே சந்நிதியான் வள்ளியம்மனுடன் சேர்ந்திருக்கும் பரவசக் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஒன்று

50 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலங்கை அப்பொழுது இனப்பிரச்சினைகள் இருந்தாலும் ஜனநாயக நாடு என்று கூறக்கூடிய அளவுக்கு சிவில் நிர்வாகப் பண்புகள் பேணப்பட்ட காலம் நீதித்துறை தனித்துவமாகவும் சிறப்பாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி 50ம் - 60ம் ஆண்டு தசாப்த காலத்தில் பல புகழ்பூத்த நீதிபதிகள் வழக்கறிஞர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். சட்டத் திறமைகளால் மட்டுமன்றித் தற்துணிவுடனும் சமயோசிதமாகவும் செயற்படக்கூடிய வல்லமைகளாலும் அவர்கள் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் அறியப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களில் காலஞ்சென்றவர்களான நீதியரசர் பொன். ஸ்ரீஸ்காந்தராசா, சட்டமேதை ஜீ. ஜீ. பொன்னம்பலம் செனட்டர், நடேசன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

நீதிபதி ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் ஆழமான சட்ட அறிவும் அனுபவமும் திறமையும் துணிவும் நிறைந்தவராகக் காணப்பட்டார். பூரணமான இறைநம்பிக்கை கொண்ட ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் நியாயங்களை சீர்தூக்கிப் பார்த்து நிதானமான தீர்ப்பு வழங்கும் இயல்பு உள்ளவராகையால் அவர் வழங்குகின்ற தீர்ப்புகள் தொடர்பாக மேன்முறையீடு செயற்பட்டாலும் பெரும்பாலும் அதில் மாற்றங்கள் எதுவும் இடம்பெறுவதில்லை. அதேபோல அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்ற வழக்கறிஞராக வாழ்ந்த ஒரு பெருந்தகை. இந்த வகையில் ஸ்ரீஸ்கந்தராசா நீதிபதியாகவும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் வழக்கறிஞராகவும் வாதிடும் வழக்குக்கள் மிகவும் விறுவிறுப்பானவையாகவும் ஆழமான கருத்துக்கள் பரிமாறப்படுவனவாகவும் சுவாரசியம் நிறைந்தனவாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும். சட்டத்துறையில் ஈடுபாடு, ஆர்வம் உள்ள பலர் இவர்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை ஆர்வத்துடன் நாடிச்சென்று இரசித்து மகிழ்வது வழக்கம்.

இவர்களின் சமயோசிதமான கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு சிறிய உதாரணத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. ஒரு ஆடி அமவாசை தினம் நீதிபதியாக ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் செயற்பட்டுக்கொண்டிருந்தார். அதே நீதிமன்றத்தில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களும் வழக்கறிஞராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மதிய இடைவேளை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஜீ.ஜீ. பொன்னம்பலம் நீதிபதி அவர்களிடம் இன்று இந்துக்களின் முக்கிய ஒரு புனித தினமாகையால் காலை அமர்வுடன் நீதிமன்றத்ததை நீதிபதி அவர்கள் முடித்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கின்றோம் என்று பக்குவமாக வேண்டுகோளை விடுத்தார்கள்.

அதற்கு நீதிபதி ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் நான் காலையிலேயே ஆடி அமாவாசை விரதசெயற்பாட்டை செய்துவிட்டுத்தான் கடமைக்குப் புறப்பட்டேன். கடமைக்கு வருகின்ற பலரும் இவ்வாறே செயற்பட்டிருப்பார்கள் என நம்புகின்றேன் என கடமையுணர்வுடனும் அதே நேரம் இங்கிதமாகவும் தன்னுடைய பதிலைத் தெரிவித்தார்கள். ஆனாலும் நீதிமன்ற அமர்வை ஒரு நேரத்துடனேயே முடித்து தனது பெருந்தன்மையைக் காட்டுவதற்கும் அவர் தவறவில்லை.

1949ம் ஆண்டளவில் நீதிபதி ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் கொழும்பில் நீதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய பதவி நிலை தொடர்பாக நீதியாகவும் நியாயமாகவும் அவருக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வை மேலிடம் அவருக்கு வழங்க மறுத்ததனால் மேலிடத்தினுடைய முடிவைத் துணிந்து நிராகரித்தது மட்டுமன்றி தனது பதவியை இழப்பதற்குக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்காதவராக தனது சொந்தக் கிராமமான தொண்டமானாற்றை வந்தடைந்தார்கள். தனது குலதெய்வமான சந்நிதியானுடைய திருத்தலத்திற்குச் சென்று அவனுடைய பாதங்களில் தன்னுடைய மனக்குறையை ஒப்புவித்தது மட்டுமன்றி தான் பிறந்து வளர்ந்த அந்த மண்ணிலேயே ஒரு சாதாரண மனிதனைப் போல வாழ்வதற்கு முடிவு செய்துவிட்டார்.

தேசம் மதிக்கின்ற திறமையுடன் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கடமையாற்றினாலும் கூட சந்நிதியானினுடைய அடிமையாக வாழ்ந்து வந்தவர் ஸ்ரீஸ்கந்தராசா நீதிபதி அவர்கள். ஆலயத்தில் உற்சவம் ஆரம்பித்துவிட்டால் தேசத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் ஆற்றங்கரையானிடம் வந்து அவனுடைய எளிமையும் அருளும் ததும்பும் எழில் கோலத்தை உற்சவகாலம் முடியும் வரை அங்கேயே தங்கி கண்குளிரக் கண்டு மகிழ்வது அவரது வழமையாகும்.

சந்நிதியானுடன் இத்தகைய ஈடுபாடு கொண்ட நீதிபதி அவர்கள் அச்சமயம் சந்நிதியில் தங்கியிருந்தது மட்டுமன்றி அவனது அடியவனாக, அடிமையாக ஆலயத்தில் சரியைத் தொண்டில் ஈடுபடலானார். ஆம்! அவரது மனைவி ஆலயத்தின் உள்வீதி, வெளிவீதி என்பவற்றைக் கூட்டித் துப்பரவு செய்ய நீதிபதி அவர்கள் கூட்டப்பட்ட குப்பைகளை ஓலையினால் இழைக்கப்பட்ட கடகத்தினுள் அள்ளிச்சென்று வெளியில் கொட்டுகின்ற கடமையில் நாள்தோறும் ஈடுபடலானார்.

இவ்வாறான சரியைத் தொண்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நீதிபதி அவர்களுக்கு 5ம்நாள் கொழும்பில் இருந்து ஓர கடிதம் வருகின்றது. மிகவும் அமைதியாகவும் பொறுமையுடனும் அந்தக் கடிதத்தைத் திறந்து பார்க்கின்றார். அதிலே அவருக்கு வழங்க மறுத்த அந்தப் பதவி உயர்வை வழங்குவதாகவும் அதனை உடனே வந்த பொறுப்பேற்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி செய்தியை அறிந்த ஆலயச்சூழலில் இருந்த அனைவரும் அக மகிழ்ந்தனர். ஒரு நீதிபதியாக இருந்தும் சாதாரண குடிமகனைப் போல தங்களுடன் சேர்ந்து சரியைத் தொண்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நீதிபதி அவர்களை தடுக்கவும் முடியாமல் அதே நேரம் அதனைத் தாங்கவும் முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த அவரது உறவினர்களுக்கும் பூசகர்களுக்கும் சந்நிதியானுடைய அற்புதத்தை எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

இதுபோன்ற பல அற்புத நிலைகளை அனுபவித்து வந்த அந்த பகுதி மக்கள் ஒரு சேய்க்கு ஏற்பட்ட குறையை ஒரு தாய் எவ்வளவு விரவாகத் தீர்ப்பாளோ அதேபோல சந்நிதியானின் அடியானாக வாழ்ந்த நீதிபதி அவர்களின் குறையை சந்நிதியான் தீர்த்து வைத்ததில் வியப்பேதும் உண்டோ என்றும் தமக்குள் பேசிக் கொண்டனர்.

ஆம்! நீதிமன்றக்களுக்கெல்லாம் நீதிமன்றமாய் விளங்குவது சந்நிதியானே, நீதிபதிக்கெல்லாம் நீதிபதியாய் விளங்குபவன் சந்நிதியான். ஆகவே இந்த வழக்கை இங்கேதான் போட்டு நீதியைப் பெறலாம் என்பதை நீதிபதி ஸ்ரீஸ்காந்தராசா அவர்கள் எவ்வளவு துல்லியமாக அறிந்து வைத்திருந்தார்கள் என்பதை மேற்படி சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது அல்லவா?

உறவைப் பிரிந்து, ஊரைப் பிரிந்து, பொருளை இழந்து தாங்கமுடியாத மனச்சுமைகளுடன் வாழ்ந்து வருகின்ற ஆயிரக்கணக்கான அடியவர்கள் சந்நிதியானினுடைய கருணை உள்ளத்தினைத் தெரிந்துகொண்டதனால்தானே இன்றும் நாள்தோறும் அந்த சந்நிதியானிடம் வந்து தமது துன்பங்களையும் சஞ்சலங்களையும் போக்கிக் செல்கின்றனர். அவனது கருனையே கருணை.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்சவத்திற்கு முன்பு நடைபெறுகின்ற அபிஷேக நிகழ்வில் உற்சவகாலப் பிரதம பூசகர் ஆ. சிவசண்முகஜயருடன் ஏனைய ஆலய பூசகர்கள் பக்திப் பரவசத்துடன் அடியார்கள் புடைசூழ கும்பங்களை தாங்கி வருகை தரும் காட்சி - 2012




2012 வருடாந்த உற்சவத்தில் முருகப்பெருமான் உள்வீதி உலா நிறைவுற்று வெளிவீதி உலாவிற்கு வருகை தரும் எழில்மிகு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் இரண்டு

திரு. க. தங்கவடிவேல் அவர்களின் சொந்த இடம் தொண்டைமானாறு. வயது 63. 1995 ஆம் ஆண்டு தொண்டைமானாற்றுப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபொழுது திரு. தங்கவடிவேல் குடும்பமும் இடம்பெயர்ந்து பருத்தித்துறை ஆத்தியடி வீதியில் குடியேறி தற்பொழுதும் அங்கேயே வசித்துவருகின்றனர்.

திரு. தங்கவடிவேல் அவர்கள் எளிமையும் அமைதியும் நிரம்பியவர். கல்வியறிவு இல்லாத பாமர குடிமகனாக இருந்தாலும் இறைபக்தி நிரம்பியவர் இறையன்பு அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்ததினால் தூய்மையானதும், தொடர்ச்சியானதுமான இறைதொண்டை மேற்கொண்டு வரும் ஒரு அன்பராக வாழ்ந்து வந்தார்.

தொண்டைமானாற்றில் வாழ்ந்து வந்த காலத்தில் குடும்பத் தலைவர் என்ற வகையில் தொழில் ரீதியான கடமைகளை நிறைவேற்றும் அதேவேளை அங்கே அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், வீரபத்திரகாளி அம்மன் ஆலயம் ஆகியவற்றிற்கெல்லாம் பூக்கள் கொய்து பூமாலை கட்டிக் கொடுப்பது அவருடைய வழக்கமான கடமைகளாக இருந்தன.

இப்படிப்பட்ட தொண்டுகளைச் செய்து வருபவர் பருத்தித்துறையில் சென்று குடியேறியமையால் ஏற்கனவே தனது சொந்த ஊரில் இருந்த பொழுது மேற்கொண்டு வந்த தொண்டுகளை செய்யமுடியாத நிலை ஏற்பட்டதையிட்டு மிகவும் மனவருத்தமடைந்தார்.

ஆனாலும் அவரிடம் உண்மையான இறையன்பு இருந்ததனால் தான் செய்துவந்த அந்த சரியைத் தொண்டுகளை தற்போது குடியிருக்கும் இடத்தினுள் ஆத்தியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஆலயத்தில் செயற்படுத்த ஆரம்பித்தார். அதுமட்டுமன்றி இத்தகைய இறைதொண்டினை தனது நித்திய கடமையாகவும் ஆக்கிக் கொண்டார்.

இக்காலத்தில் 1998ம் ஆண்டு திரு. தங்கவடிவேல் அவர்கள் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். அவருக்கு பாரிசவாதம் ஏற்பட்டு ஒரு பக்கத்துக் கை, கால் என்பன செயலிழக்கும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது.

திரு. தங்கவடிவேல் அவர்களைப் போன்று அவரது மனைவி பிள்ளைகள் ஆகியோரும் சந்நிதியான் மீது அளவில்லாத பக்தி உள்ளவர்கள். தங்களுக்காக இதுவரை காலமும் கஸ்ரப்பட்டு தங்களை உருவாக்கிய தமது குடும்பத்தலைவருக்கு ஏற்பட்ட நோயையும் அதனால் அவருடைய உடல் உறுப்புக்கள் செயல் இழந்துள்ள நிலையையும் எண்ணி மிகவும் மனம் வருந்தினர்.

இறை தொண்டில் ஈடுபடுத்துகின்ற அவரது உடலில் ஏற்பட்டுள்ள நோயை சந்நிதியானே நீதானப்பா குணமடையச் செய்ய வேண்டுமென்று சந்நிதி முருகனிடம் உள்ளம் உருகிவேண்டுதல் செய்தனர். விசுவாசத்துடன் தொண்டு செய்கின்ற ஒரு அடியவனுடைய துன்பம் தொடர்பான வேண்டுதல் என்பதனால் போலும் திரு. தங்கவடிவேலினுடைய குடும்பத்தவரின் வேண்டுதலுக்கு சந்நிதியான் உடனடியாகவே செவி சாய்த்தான்.

அவர்களுடைய வேண்டுதல் பலித்தது. திரு. தங்கவடிவேல் அவர்கள் மோசமான நிலையில் இருந்து படிப்படியாக விடுபட்டு மற்றவர்களின் உதவியுடன் நடமாடும் நிலைக்கு அவர் சுகமடைந்து விட்டார்.

திரு. தங்கவடிவேல் அவர்களின் உடல் நிலையில் இவ்வாறு முன்னேற்றம் ஏற்பட்ட நிலையில் தனது குடியிருப்புக்கு அருகாமையிலிருக்கும் விநாயகர் ஆலயத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாது பூக்கள் பறித்து பூசைக்கு வழங்கி வந்த செயற்பாட்டை பக்தியுடன் நினைவு கூர்ந்தார். இவ்வாறு நினைவு கூர்ந்தவர் விநாயகர் ஆலயத்திற்கு காலைப் பூசைக்கு பூக்கள் கொய்து பூமாலை தொகுத்து வழங்குகின்ற செயற்பாட்டை எப்படியும் வழமை போல செய்வதென்று தீர்மானித்தார்.

உடல் உறுப்புக்கள் முழுமையாகச் செயற்பட இயலாத நிலையிலும் இறைதொண்டை தொடர்ந்து செய்யவேண்டுமென்ற மன உந்தலினால் ஊன்றிச் செல்லும் தடியின் உதவியுடன் நடந்து சென்று பூக்கள் பறிப்பதற்கு ஏற்ற வகையில் தனது உடல் உறுப்புக்களை படிப்படியாக இயைபுபடுத்தி பூக்களைப் பறித்து பூசைக்கு வழங்கும் செயற்பாட்டை முன்புபோல தற்பொழுதும் தினமும் செய்துவரும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் திரு. தங்கவடிவேல் அவர்களின் குல தெய்வமான ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் உற்சவம் ஆரம்பித்தது. செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு தினமும் சென்று வராவிட்டாலும் உரியமுறையில் விரதம் அனுட்டித்து வீட்டில் இருந்தவாறே சந்நிதியானை பக்தியுடன் வழிபட்டு வந்தார்.

திரு. தங்கவடிவேல் குடும்பம் உற்சவத்தில் ஒருநாளேனும் பங்குபற்ற வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானித்ததற்கு இணங்க 01.09.2001 சனிக்கிழமை தேர் உற்சவத்திற்காக ஆலயத்திற்கு காரில் வருகை தந்தனர். அங்கே எம்பெருமான் தேரில் வருகின்ற காட்சியைக் கண்குளிரக் கண்டு பக்திப் பரவசமடைந்தனர். இவ்வாறு தேர் உற்சவத்திற்கு வருகை தந்து எம்பெருமானை வழிபட்டதன் மூலம் தாங்கள் தினமும் சந்நிதியானிடம் வரவில்லையே என்ற கவலையை ஓரளவு மறந்து வீடு திரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் திரு. தங்கவடிவேல் அவர்களின் சிந்தனை இவர்களது சிந்தனையில் இருந்து வேறுபட்டிருந்தது. அவர் வீடு திரும்பிய பின் ஞாயிற்றுக்கிழமை அதாவது அடுத்தநாள் இடம்பெறவிருக்கும் தீர்த்த உற்சவத்திலும் சந்நிதியானைத் தரிசிக்கவேண்டும் என்று ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினார்.

இவ்வாறு சிந்தித்தவர் தனது விருப்பத்தை மற்றவர்களுக்கு தெரிவித்தது மட்டுமன்றி தீர்த்த உற்சவத்திற்கு எப்படியும் செல்லவேண்டும் என்பதைப் பிடிவாதமாகக் கூறிவிட்டார். அவருடைய விருப்பத்திற்கிணங்க மீண்டும் அடுத்தநாள் தீர்த்த உற்சவத்திற்கு எல்லோரும் வருகை தந்தனர். எம்பெருமானுடைய தீர்த்தமாடும் நிகழ்வு ஆரம்பித்ததும் ஆலயத்தின் சூழலில் அடியார் கூட்டம் அலைமோத ஆரம்பித்தது. உண்மையில் கடந்த சில வருடங்களை விட அடியார் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது.

திரு. தங்கவடிவேல் அவர்களை தங்களுடன் தீர்த்தமாடும் இடத்திற்குக் கூட்டிச் சென்றாலும் அந்தக் கூட்டத்தின் மத்தியில் அவரால் சமாளிக்க முடியாது என்பதை உணர்ந்த அவரது வீட்டுக்காரர் அவரை சனநெருக்கம் குறைந்த ஓர் இடத்தில் இருக்குமாறு கூறிவிட்டு ஆலயத்திற்கு அருகாமையிற் சென்று தீர்த்தமாடும் காட்சியைக் கண்டுவிட்டு திரும்புவதற்காகச் சென்று விட்டனர்.

இவ்வாறு சென்றவர்கள் தாம் கூறியதுபோல சிறிது நேரத்திற்குள்ளேயே திரு. தங்கவடிவேல் அவர்கள் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தார்கள். அங்கே அவரைக் காணவில்லை. அந்த இடம் முழுவதும் நன்கு தேடியும் அவரைக் காணமுடியவில்லை. திரு. தங்கவடிவேல் அவர்களுக்கு நீரழிவு நோய் இருந்ததனால் சிறுநீர் கழிப்பதற்காக சென்றிருக்கக்கூடும் என நினைத்து ஆலயத்தின் சுற்றாடல் பகுதிகளுக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயும் தேடினார்கள். எங்கும் அவரைக் காணமுடியவில்லை. என்ன நடந்ததென்று எவருக்கும் தெரியவில்லை. எல்லோரும் கலக்கமடைந்தனர்.

மற்றவர்களின் உதவியின்றி அல்லது ஊன்றுகோலின் உதவியின்றி நீண்ட தூரம் நடக்க முடியாதவர் எங்கே சென்றிருக்கக்கூடும் எப்படி சென்றிருக்க முடியும் என்று சிந்தித்தவர்களாய் எதுவும் விளங்காமல் எல்லோரும் குழப்பம் அடைந்தனர்.

தாங்கள் அவரைத் தனிமையாக விட்டுச் சென்றது தவறு என்பதை உணர்ந்த திரு. தங்கவடிவேல் அவர்களின் குடும்பத்தினர் கலக்கத்துடன் எல்லா இடமும் திக்குத்திக்காகச் சென்று தேட ஆரம்பித்தனர். சிலர் ஆலயவாசல்ப் பக்கம் சென்று அங்கே தேட முயற்சித்தனர்.

என்ன ஆச்சரியம் திரு. தங்கவடிவேல் அவர்கள் தலை, உடம்பு, நெஞ்சு, என்று உடம்பின் அதிகமான பகுதிகள் எம்பெருமானின் தீர்த்தத்தினால் தோய்ந்தபடி சிரித்தமுகத்துடன் சாதாரண ஒரு சுகதேகி என்று மற்றவர்கள் நினைக்கும் அளவிற்கு ஆலயவாசல்ப் பக்கத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டு அவர்களது குடும்பத்தினர் எல்லோரும் வியப்படைந்தனர். சந்நிதியான் விந்தையை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

சந்நிதியானின் தீர்த்தோற்சவக் காட்சியை எப்படியாவது காணவேண்டுமென்று திரு. தங்கவடிவேல் அவர்களின் இறுதி விருப்பத்தை சந்நிதியான் நிறைவேற்றி வைத்துள்ளான். ஆம்! திரு. தங்கவேடிவேல் அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட விருப்பத்தை செய்படுத்துவதற்கான உடற்பலத்தை சந்நிதியானே கொடுத்து தனது தீர்த்த உற்சவத்தைக் கண்குளிரப் பார்க்கும் பாக்கியத்தை அவருக்கு வழங்கியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விந்தையின் இரகசியம் திரு. தங்கவடிவேல் அவர்களுக்கும் சந்நிதியானுக்கும் தான் விளங்கும். உண்மையான பக்தர்களுக்கும் சந்நிதியானுக்குமுள்ள உறவு விந்தையானது. அந்த விந்தையை சாதாரணமானவர்கள் விளங்கிக் கொள்ள முடியாதுதான்.

அடுத்தவருடம் இடம்பெறப்போகும் சந்நிதி உற்சவத்தைக் காண்பதற்குரிய சந்தர்ப்பம் திரு. தங்கவடிவேல் அவர்களுக்கு கிடைக்காது என்பது அப்போது எவருக்கும் விளங்கவில்லை. அதை எவரும் நினைக்கவும் இல்லை. ஆம்! சந்நிதியானின் உற்சவம் முடிவடைந்து ஒரு சில வாரங்களுக்குள் திரு. தங்கவடிவேல் அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்கள். வழமைபோல இருந்தவர் திடீரென நோய்வாய்ப்பட்டு இரண்டு நாட்களுக்குள் எந்தவிதமான உடற்துன்பமும் இல்லாமல் இறைபதம் அடைந்துவிட்டார்கள்.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் மூன்று

பாய்ந்து செல்லும் ஆற்றுவெள்ளத்தில் தோன்றி மறையும் நீர்க்குமிழ் போன்றதே எமது வாழ்க்கை. இப்படிப்பட்ட காலத்தால் குறுகியதும், நிலையற்றதுமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்கள் சில சந்தர்ப்பங்களில் பரம்பொருளான இறைவனைப் பற்றி விமர்ச்சிப்பதும் சிலவேளை விசமத்தனமாக நடந்துகொள்வதும் எவ்வளவு பரிதாபமானதும், அறியாமையும் நிறைந்த ஒரு செயலாகும் என்பதை நாம் குறிப்பிட்டுக் கூறத்தேவையில்லை.

சந்நிதி வேலன், கலியுகக் கந்தன் கலியுகத்தில் வாழுகின்ற மனிதர்களது இயல்புகளையும் எப்படியெல்லாம் அவர்கள் நடந்து கொள்வார்கள் என்பதையெல்லாம் நன்கு விளங்கிக்கொண்டு ஆற்றங்கரையில் அமைதியாக வீற்றிருப்பான். திசைமாறிச் செல்பவர்களை அவர்களது பாதையிலேயே செல்லவிட்டு வேண்டிய வேளைகளில் வேண்டிய முறைகளில் அவர்கள் மீதான திருவிளையாடல்களை நடாத்துவதற்கும் அவன் தவறுவதில்லை.

சாதாரணமாக ஆலயத்திற்கு வழிபடச் செல்லுகின்ற அடியார்களுக்கே நாளாந்தம் தனது திருவிளையாடல்களை நடாத்துகின்றவன் சந்நிதி முருகன். எமது அன்றாட வேலைச் சுமைகள் காரணமாக ஆலயத்திற்குச் சென்று விரைவாகப் பூசையை முடித்துக்கொண்டு விரைவாக வீடு திரும்பி எமது வேலையை முடிப்போம் என்று ஆலயத்திற்கு சென்றால் அங்கே வழமைக்கு மாறாக மிக நீண்ட நேரம் காத்திருந்தே பூசையைக் காணவேண்டிய நிலை நேரிடுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில் எமது வேலையை முடித்து பூசை முடிவடைந்திருக்கும் ஏதோ ஆலயத்திற்குச் சென்று சந்நிதியானை வணங்கி வருவோம் என்று ஆலயத்திற்குச் சென்றால் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக பூசையைக் காணக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். இதெல்லாம் சந்நிதியானை தரிசிக்க செல்கின்ற அடியார்களுக்கு அடிக்கடி ஏற்படுகின்ற அனுபவங்கள். ஒரு வகையில் சந்நிதி ஆலயத்தின் தனித்துவமான இயல்பென்று கூட இதனைக் குறிப்பிடலாம்.

இந்த வகையில் இறைநம்பிக்கை, இறைவணக்கம் தொடர்பாக நாஸ்திக வாதம் பேசுபவர்கள், அரைகுறையான இறைநம்பிக்கை கொண்டவர்கள் மனதிற்குள் நம்பிக்கை இருந்தும் வெளியில் பிடிவாதமாக இருப்பவர்கள், கஞ்சல்தனமாக நடப்பவர்கள் போன்ற அன்பர்கள் தொடர்பாக சந்நிதியானுடைய திருவிளையாடல்கள் எப்பொழுதும் நடந்த வண்ணமே உள்ளன.

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்தது மட்டுமன்றி ஆலயத்திற்கு அண்மையில் தனது பலசரக்கு வியாபாரத்தையும் நடாத்தி வந்த அன்பர் திரு.க. நவரத்தினம் அவர்கள் இவர் தொழிலில் நேர்மையானவர். வாழ்க்கையில் சீரான தன்மையைப் பேணி வந்தவர்.

ஆனாலும் சந்நிதி ஆலயத்திற்கு அருகாமையில் வாழ்ந்து வந்த பொழுதும் சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்ற வழக்கத்தை அவர் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல தனது வியாபாரச் செயற்பாடு காரணமாக அதிகமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் சந்நிதி முருகனுடைய வாசலைத் தாண்டிச் செல்லுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்ற பொழுதும் கூட சந்நிதியானை வணங்குவதில்லை. இப்படிப்பட்ட அன்பருக்கு ஏற்பட்ட புதுமையான அனுபவத்தை அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு அண்மையில் பலசரக்கு வியாபரம் நடாத்தி வந்த திரு.க. நவரத்தினம் அவர்கள் ஒரு நல்ல குடும்பத் தலைவராகவும் நேர்மையான வியாபாரி ஆகவும் இருந்தாலும் இறைவழிபாடு என்ற விடயத்தில் ஒரு வித்தியாசமான இயல்புள்ளவராகவே இருந்தார்.

வியாபாரத்தில் நாணயம் உள்ளவராக மதிக்கப்பட்டதால் சந்நிதி ஆலயச்சூழலில் பல்வேறு வகையான கடைகள் வைத்திருப்பவர்களும் வியாழக்கிழமை இவருடைய கடையில் தமக்குத் தேவையான பொருட்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்து வெள்ளிக்கிழமை அவற்றை வியாபாரம் செய்வார்கள். மறுநாள் காலையில் சனிக்கிழமை திரு.க. நவரத்தினம் அவர்கள் சந்நிதியானுடைய வாசலைத் தாண்டிச் சென்று தான் கடன் கொடுத்தவர்களிடம் எல்லாம் தனக்குச் சேரவேண்டிய பணத்தை வசூலித்து வருவது வழமையான நிகழ்ச்சி ஆகும். ஆனாலும் திரு.க. நவரத்தினம் அவர்கள் சந்நிதியானை வழிபடாத ஒரு நாஸ்திகன் போலவே தென்பட்டார்.

திரு.க. நவரத்தினம் போலல்லாமல் அவருடைய மனைவி பிள்ளைகள் எல்லோரும் சந்நிதியானை வணங்கும் வழக்கமுள்ளவர்கள். 1985 ஆம் ஆண்டு சர்க்கரை என அழைக்கப்படும் இவருடைய மகள் லீலாவதியும் குட்டி என அழைக்கப்படும் இவரது மருமகன் ஐ. சிவராசா ஆகியோர் தமது பிள்ளைகளுடன் கதிர்காமத்திற்கு தலயாத்திரை செல்வதற்கு விரும்பினர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் தென் இலங்கைக்கும் இடையில் வசதியான தரைவழிப்பாதை இருந்தது. அத்துடன் அவர்களிடம் சொந்தமாகக் காரும் இருந்ததனால் திரு.க. நவரத்தினத்தினுடைய மகள், மருமகன் மற்றும்

289485 cc
14037 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகள் அனைவரும் அவர்களுடைய சொந்தக் காரிலேயே கதிர்காமத்திற்கு தலயாத்திரை சென்றனர்.

குட்டி குடும்பம் கதிர்காமத்திற்கு தலயாத்திரைக்கு புறப்பட்ட 3ஆம் நாள் வியாபார நோக்கத்திற்காக தென் இலங்கைக்கு பிரயாணம் செய்து திரும்பிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓர் அன்பர் க. நவரத்தினம் அவர்களிடம் வந்து அவருடைய மகள் குடும்ப பிரயாணம் செய்த காரின் இலக்கத்தைக் குறிப்பிட்டு குறிப்பிட்ட அந்த இலக்கமுடைய கார் கதிர்காமத்திற்குச் செல்லும் வழியில் மலையிலிருந்து பெரிய பள்ளத்தில் வீழ்ந்து முற்றாகச் சேதமடைந்துவிட்டது எனவும் அதில் பயணம் செய்த அனைவரும் இறந்துவிட்டனர் எனவும் ஒரு செய்தியை அவருக்கு வழங்கினார்.

இந்த செய்தியைக் கேட்ட திரு.க. நவரத்தினத்தின் உள்ளமும் உடலும் பயத்தினால் பதட்டமடைந்தது. அவரது இதயமே நின்றுவிடும்போல் இருந்தது. இப்படியான ஒரு துன்பகரமான வேதனையைத் தாங்கமுடியாத நவரத்தினம் அவர்கள் இதனை யாரிடம் முறையிடலாம், யார் இந்தத் துன்பத்தைப் போக்கக்கூடியவர் என்று தெரியாது தடுமாற்றம் அடைந்தார்கள்.

இறுதியாக மனதிற்குள் ஒரு திடமான முடிவு எடுத்தவராக இரண்டு கண்களிலும் கண்ணீர் வழிய சந்நிதிவேலா! ஆற்றங்கரை முருகா! என்று முருகனுடைய நாமங்களை உச்சரித்த வண்ணம் சந்நிதியானிடம் வந்து அவனிடம் சரணாகதி அடைந்தார்கள். ஆம் சந்நிதி ஆலயத்தின் வாசலில் வந்து உன்னை நாடி வருகின்ற ஆயிரக்கணக்கான அடியவர்களின் துன்பத்தைப் போக்குகின்ற வேலவா! நீதானப்பா எனது மகளின் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும். உன்னைவிட்டு நான் வேறு யாரிடம் செல்வேன் என்று கதறி அழ ஆரம்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடன் போர் செய்யவந்த சூரபத்மனுக்கே உன்னுடைய அருட்கோலத்தைக் காட்டிய கருணை உள்ளம் படைத்த பரம்பொருள் அல்லவா நீ! உன்னிடம் சரணடைந்துள்ள எனது துன்பத்தையும் நீதானப்பா போக்க வேண்டுமென்று முருகனது வாசலில் மன்றாடி நின்றார்கள். இவ்வாறு தனது அறியாமை என்ற இருள் முற்றாக நீங்கி அங்கே கூடிநின்ற அடியவர்களில் ஒருவராக நின்று சந்நிதியானை வழிபாடு செய்தார்கள்.

அந்த நேரம் ஆலயத்தில் மாலைப்பூசை முடிவடைந்து சின்ன ஆறுமுகசாமி ஐயர் அடியார்களுக்கு திருநீறு வழங்கிக் கொண்டு வெளிமண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஆலயத்தின் வாசற்படியே மிதிக்காத திரு.க. நவரத்தினம் அவர்களையும் அவரது கோலத்தையும் பார்க்கின்றார்கள். திரு. நவரத்தினம் அவர்களின் உள்ளம் மட்டுமல்ல அவரது உடலும் நடுங்கிய வண்ணமே இருந்தது. நடுங்கிக் கொண்டிருந்த கைகள் இரண்டையும் ஐயாவை நோக்கி நீட்டுகின்றார்கள். சின்ன ஆறுமுகசாமி ஐயரும் இவருக்கு நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டது என்பதை மனதிற்குள் உணர்ந்தவராய் மௌனமாக திருநீற்றை அவருக்கும் வழங்கினார்கள்.

திரு.க. நவரத்தினம் அவர்கள் அன்றைய தினமே வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி கதிர்காமத்திற்கு மகளின் குடும்பத்தைத் தேடப் புறப்பட்டார்கள்.

தனக்குக் கிடைத்த தகவல் பொய்யான தகவலாக இருக்க வேண்டும், தனது மகளின் குடும்பம் உயிர் தப்பியிருக்க வேண்டுமென்ற ஆதங்கமே அவரது உள்ளத்தில் திரும்பத் திரும்ப அலை மோதிக்கொண்டிருந்தது. கதிர்காமத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்குச் சென்றவர் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகளின் குடும்பம் பிரயாணம் செய்த காரைத் தேடத் தொடங்கினார்கள். காரின் இலக்கத்தைப் பேப்பரில் எழுதி பலபேரிடமும் கொடுத்து எல்லா இடங்களிலும் மகளின் காரை தேட நடவடிக்கை எடுத்த்தார்கள். இவ்வாறு ஒரே நேரத்தில் பலபேருடைய முயற்சியுடன் எல்லாத் திசைகளிலும் தேடிய பொழுதிலும் காரைக் காணமுடியவில்லை. அதுமட்டுமல்ல அந்தக் காரைக் கண்டதாக எவரிடமிருந்தும் எத்தகவலையும் பெறமுடியவில்லை.

இப்பொழுது தனது மகளின் குடும்பத்திற்கு நடந்த சம்பவம் உண்மையானது உறுதியானது என்ற முடிவுக்கு திரு. நவரத்தினம் அவர்கள் வந்துவிட்டார்கள்.

தனது மகளின் குடும்பத்தை இழந்து அவர் வீடு திரும்ப விரும்பவில்லை. அந்தத் துன்பத்துடன் தன்னால் உயிர்வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

மறுபுறம் ஆபத்பாந்தவனாகிய சந்நிதியானிடம் தான் முழுமையாக சரணாகதி அடைந்தாலும் ஏனைய அடியார்களைப் போல உரிமையுடன் அவனிடம் சரணாகதி அடையமுடியாத பரிதாப நிலையையும் நன்கு உணர்ந்து கொண்டார்கள். ஆம் சந்நிதியானை அன்றாடம் வழிபடுகின்ற அடியவர்களுக்குத்தானே சந்நிதியான் தனது அருளை வழங்கமுடியும். என்றுமே அவனை வழிபடாத கல்நெஞ்சம் படைத்த நான் சந்நிதி முருகனிடம் எப்படி இப்பொழுது உரிமையுடன் சரணாகதியடைய முடியும்? தன்னுடைய துன்பத்தை அவன் எப்படிப் போக்கமுடியும்? என்ற நியாயத்தையும் தன்னுள் உணர்ந்து கொண்டார்கள். ஆகவே எல்லாவற்றிற்கும் ஒரே வழி தனது உயிரை மாய்ப்பதுதான் என்று முடிவெடுத்தார்கள். தானும் ஏதாவதொரு மலையில் ஏறி அங்கிருந்து குதித்து எவருக்குமே தெரியாது தனது உயிரையும் மாய்ப்பதற்கு திட்டமிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு திட்டமிட்டு முடிவெடுத்தவர் சந்நிதியானையும், கதிர்காமக் கந்தனையும் மனதுள் நினைத்த வண்ணம் அங்கே ஓடிக்கொண்டிருக்கும் மாணிக்ககங்கையில் இறங்கி அதனுள் மூழ்கி எழுந்தார்கள்.

மூழ்கி எழுந்து கரை ஏறுவதற்கு கரையை நோக்கி நடக்க ஆரம்பித்த திரு. நவரத்தினம் அவர்கள் ஆச்சரியத்தால் உறைந்து போனார்கள்.

ஆம்! அவரது மகள், மருமகன் பேரப்பிள்ளைகள் அனைவரும் மாணிக்க கங்கைக்கரையிலே அவருக்குக் காட்சி கொடுத்தனர். அவருக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. எல்லையில்லாத கருணை நிறைந்த சந்நிதியானின் பேரருளை எண்ணி உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

திரு.க. நவரத்தினம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல அவரின் மகளின் குடும்பத்திற்கு உண்மையில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை அத்துடன் அவர்கள் பிரயாணம் செய்த காரை கதிகாமத்தில் தமக்கு அறிமுகமான ஒருவரின் வீட்டில் நிறுத்தியிருந்தமையால்தான் இவர்களுடைய காரை எங்கு தேடியும் காணமுடியாத நிலையும் ஏற்பட்டது.

திரு. நவரத்தினம் அவர்கள் தனது மகளின் குடும்பம் உயிர் தப்பியிருப்பதனால் ஏற்பட்ட எல்லையில்லாத மனநிறைவுடன் தொண்டைமானாற்றிற்கு திரும்பி சந்நிதியானிடம் சென்றார்கள். அன்றைய தினமும் சின்ன ஆறுமுகசாமி ஐயர் அவர்களே பூசை செய்து கொண்டிருந்தார்கள்.

திரு. நவரத்தினம் அவர்கள் ஆறுமுகசாமி ஐயரிடம் சந்நிதியானுடைய திருவிளையாடலை மனம் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறினார்கள். இவ்வுலகில் நிலையற்ற வாழ்க்கை வாழ்கின்ற ஒரு சாதாரண மனிதனாக இருந்துகொண்டு அகம்பாவத்துடனும், இறுமாப்புடனும் சந்நிதியானை தரிசிக்காது விட்டதும் பற்றியும் அது மட்டுமன்றி சந்நிதியானைச் சென்று வணங்குவதனால் அர்ச்சனை, அபிஷேகம் என்று வீண் செலவுகளை செய்யவேண்டி வருமே என்று மிகவும் கஞ்சத்தனமாக நினைத்ததாகவும் மனவருத்தத்துடன் எடுத்துச் சொன்னார்கள். தற்பொழுது அதற்கேற்ற படிப்பினையையும், அதற்கேற்ற செலவுகளையும் சந்நிதியான் தனக்கு ஏற்படுத்தி தன்னுடைய திருவிளையாடல்களை முடித்துள்ளான் என்பதை நன்கு உணர்ந்துள்ளதையும் சிரித்துக் கொண்டே எடுத்துக்கூறினார்கள். மேலும் இந்த சம்பவத்திற்கு பின்பு சந்நிதியானை தினமும் சென்று வணங்குகின்ற அடியவனாகவும் திரு. நவரத்தினம் அவர்கள் மாறிவிட்டார்கள்.

எம்மை நன்றாகப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தி அவனின் அடிமையாக இருந்து அவனுக்கு தொண்டு செய்வதே இப்பிறவியில் நாம் செய்கின்ற மிகப்பிரதான பணியாகும். அது மட்டுமன்றி இப்பிறவியில் நாம் சேர்க்கின்ற செல்வம் எதுவுமே எம்முடன் வரப்போவதில்லை என்பதையும் பலர் உணர மறுக்கின்றனர். இம்மையிலும் மறுமையிலும் எம்முடன் கூட வருபவை எமது இறைவழிபாடும், இவ்வுலகில் நாம் செய்கின்ற தர்மங்கள் மட்டும் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் நான்கு

வாழ்க்கையில் வறுமை, தீராதநோய், அதேநேரம் வயது வந்த மகனை வெளிநாடு அனுப்ப வேண்டுமென்ற ஆதங்கம், இவ்வாறு பல்வேறு துன்பச் சுமைகள் ஒருபுறம், அதேநேரம் பணத்தைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்ட இந்தப் பாழ்பட்ட உலகத்தில் பல்வேறு இன்னல்களின் மத்தியில் தனது கஷ்டங்களைத் தீர்க்க முயலும் பரிதாப நிலை மறுபுறம் இவ்வாறான துன்பச் சுமைகளால் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்ற ஓர் அன்பர்தான் ஜீ.பி.எஸ். வீதி, கல்வியங்காடு என்ற முகவரியில் வசித்துக்கொண்டிருக்கும் திரு. ஐ. அரசபிள்ளை அவர்கள்.

திரு. ஐ. அரசபிள்ளை அவர்கள் தனது துன்பம் நிறைந்த வாழ்க்கை நிலைமைகளையும் பின்பு சந்நிதியானை வழிபடக்கிடைத்த சந்தர்ப்பத்தையும், சந்நிதியானை வழிபடத்தொடங்கிய பின்னர் வாழ்க்கையில் காணப்பட்ட துன்பங்கள் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்து சென்ற நிகழ்வுகளையும் எமக்கு விபரமாக எழுதி அனுப்பியுள்ளார்கள்.

மிகவும் வேதனை தரக்கூடிய வருத்தங்களில் ஒன்றான முள்ளந்தண்டு வருத்தத்திற்குச் சிகிச்சை பெறுவதற்காகச் திரு. ஐ. அரசபிள்ளை அவர்கள் 1997ஆம் ஆண்டு கொழும்பு சென்றார்கள். அங்கு சிகிச்சைக்காக வைத்தியர் பலரிடம் காட்டியும் நோய் குணமடையாதது மட்டுமன்றி வைத்தியச் செலவுக்காக அவர்களிடமிருந்த பணம் எல்லாம் முடிவடைந்து தான், துன்பப்பட்டது பற்றி எமக்கு எழுதும்பொழுது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அங்கு வைத்தியர் பலரிடமும் காசு செலவுசெய்து காட்டி அதாவது கை பிடித்துப் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250/= ரூபா மருந்துச் செலவு வேறு. இவ்வாறு மனிதனிடம் மனிதன் கொள்ளை அதுவும் பகற்கொள்ளை என்றே சொல்ல வேண்டும். இப்படிக்காட்டி என்னுடைய மகன் வெளிநாடு போக ஆசைப்பட்டு சேர்த்த காசும் முடிவடைந்த நிலை. நானும் எனது மகனும் கொழும்பில் ஒரு நாளைக்கு 35 ரூபா கட்டி மிகவும் குறைந்த கட்டணத்தில் இருவரும் படுத்து உறங்கி இரவுப் பொழுதைக் கழித்தோம். சாப்பாட்டிற்கு வெளிநாட்டில் நிற்கும் எனது சகோதரிமாரின் பிள்ளைகளைக் கையேந்திக் காத்திருந்தோம்"

இவ்வாறு துன்பப்பட்ட திரு. ஐ. அரசபிள்ளை அவர்கள் தனது நோயையும் குணப்படுத்த முடியாது தனது மகனையும் வெளிநாடு அனுப்ப முடியாது தனது நோயின் வேதனையால் மகனைத் தனியே ஆபத்தான சூழ்நிலையில் கொழும்பில் விட்டுவந்த துயரச் சம்பவத்தை மனம் நொந்து எழுதி அனுப்பியுள்ளார். அவருடைய மகன் தன்னிடம் சொன்ன விடயங்களையும், தான்பட்ட துன்பங்களையும் பின்வருமாறு எழுதி அனுப்பியுள்ளார்கள்.

"அப்பா நீங்கள் உங்கள் சுகத்தைத் தேடுவதற்காக யாழ்ப்பாணம் போகின்றீர்கள். அம்மா 6 மாதங்கள் நின்றுவிட்டு உங்களை எனக்குக் காவலுக்காகத்தானே இங்கே விட்டுச் சென்றார். நீங்கள் என்னை விட்டுப் போகின்றீர்கள் என்று எனது மகன் என்னிடம் கூறினான்"

எனக்கு ஒரு புறம் கவலை மறுபுறம் எனது நோயின் வேதனை, ஆனாலும் நான் அவனைத் தனியே விட்டு வந்துவிட்டேன். இரத்மாலானை விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தில் என்னை விட்டுப் பிரிந்த அல்லது விடைபெற்ற காட்சியை இப்பொழுது நினைத்தாலும்..

இத்தகைய வேதனைகள் மத்தியில் திரு. ஐ. அரசபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பி உடலாலும் உள்ளத்தாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இவருடைய மூத்த சகோதரியின் கணவர் திரு. பரராஜசிங்கம் அவர்கள் திரு. அரசபிள்ளை அவர்களைச் சந்நிதிக்கு வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் சென்று அங்கே ஆற்றில் மூழ்கி சந்நிதியானை வணங்கி வந்தால் சிலவேளை இந்த நோயும் உனது துன்பமும் குணமடையலாம் என்று வழிகாட்டியுள்ளார்.

இவ்வாறு வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் பலர் சந்நிதிக்குச் சென்று குணமடைந்துள்ளனர் என்ற விடயத்தையும் திரு. அரசபிள்ளைக்கு எடுத்துக் கூறியுள்ளார். இந்தச் செய்திகளை எல்லாம் செவிமடுத்த அரசபிள்ளை அவர்கள் தெய்வத்தினால் ஆகாதது எதுவுமில்லை என்பதைச் சிந்திக்கத் தொடங்கினார். அத்துடன் சந்நிதியானுடைய ஆலயத்திற்கு வந்து வழிபடுவதற்கும் முடிவு செய்தார்கள்.

திரு. அரசபிள்ளை அவர்களின் உடல்நிலை முழுமையாக இடம்கொடுக்காவிட்டாலும் சந்நிதிக்குச் சென்று வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். காலப்போக்கில் ஆலயத்திற்கு வந்து ஆற்றில் மூழ்கிப் பின்பு சந்நிதியானை வணங்குகின்ற நடைமுறையை 1998ஆம் ஆண்டின் பின்பு ஒழுங்காகக் கடைப்பிடித்துவர ஆரம்பித்தார்கள்.

வெள்ளிதோறும் அதிகாலை 6 மணியளவில் கல்வியங்காட்டிலிருந்த 751 இலக்க பருத்தித்துறை பஸ் எடுத்து சந்நிதிக்கு வருகின்ற வழக்கத்தை மனம் தளராது கடைப்பிடித்து வரலானார். இவ்வாறு செயற்பட்டு வருவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக்கிக் கொண்ட அரசபிள்ளை அவர்கள் ஒரு நாள் தனது மனைவியிடம் கூறிய விடயத்தையும் அதன் பின்பு நிகழ்ந்த விடயங்களையும் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். நான் எனது மனைவியிடம் முஸ்பாத்தியாக, ஆறுமாசமாகச் சந்நிதிக்கு போகின்றேன் இந்த முள்ளந்தண்டு வருத்தம் மாறாவிட்டால் ஆற்றில் மூழ்கிச் செத்துவிடுவேன் என்று பொய்யாகச் சொன்னதைச் சந்நிதியான் மெய்யென்று நினைத்து விட்டான் போலும் ஆறுமாசத்தின் பின் எனது வருத்தம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுகம் வரத் தொடங்கியது.

அதே நேரம் எனது மகன் கொழும்பில் தனியே இருந்தது மட்டுமல்ல செலவுக்குப் பணமில்லாது மேசன்மாருடன் கூலிவேலை செய்து கொண்டிருந்ததையும் எண்ணிக் கவலைப்பட்டேன். இங்கே உயர்தர வகுப்பிற் கல்விகற்றுப் பல்கலைக்கழகம் போவதற்குச் சொற்ப புள்ளிகள் குறைவாக எடுத்ததையும் சிந்தித்து அவனது தலை எழுத்தை நினைத்து வாராவாரம் சந்நிதியானை தரிசிக்க வரும்பொழுது சந்நிதியானே எனது மகனையும் ஒருவழி சேர்த்துவிடப்பா என்று அவனிடம் மன்றாட்டமாக அந்த மனக்குறையையும் ஒப்புவித்தேன்.

மேலும் எங்களிடம் பணம் இல்லை. நாங்கள் நினைத்த இடத்திற்குப் போக முடியாது. CANADA என்று எழுதிப் பார்க்க முடியுமே தவிர 15 அல்லது 17 இலட்சம் செலவு செய்து அங்கே எங்களால் போக முடியுமா? இதெல்லாம் நடக்கக் கூடிய விடயமா என்று சிந்தித்தக் கவலைப்பட்டேன்.

ஆனால், சந்நிதியான் அதனையும் சாதித்துக் காட்டிவிட்டான். மகன் இப்பொழுது கனடாவில் இருக்கின்றார். நானும் எந்தவித வைத்தியச் சிகிச்சையும் இன்றிப் பூரண சுகமாகிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நினைத்ததெல்லாம் நடக்குமே நீ நினைத்தால் சந்நிதி வேலா..' என்று இவர் 1999 ஞானச்சுடருக்கு எழுதி அனுப்பிய பாடல் வரிகளையும் குறிப்பிட்டு தனது கடிதத்தை எமக்கு எழுதி அனுப்பியுள்ளார்.

வாழ்க்கையில் பொருளாதார பலம், உறவினர் பலம், அரசியற் பலம், அதிகார பலம் என்று எந்தவிதமான பலமோ அல்லது வசதிகளோ வாய்ப்புக்களோ இல்லாது பல வகைப்பட்ட துன்பச் சுமைகளினால் துவண்டு போய் இறுதியாகச் சந்நிதிக்கு வந்து உடல் தளர்ந்து உள்ளம் வெதும்பி நிற்கின்ற அரசபிள்ளை போன்ற பல அடியார்களை இன்றும் நாம் சந்நிதியிற் காண்கின்றோம்.

ஆம்! ஆற்றங்கரை அழகன் கலியுகக் கந்தன், ஆபத்பாந்தவன், அநாதரட்சகன் என்றெல்லாம் போற்றப்படுகின்ற சந்நிதிமுருகன் இப்படிப்பட்ட அன்பர்களது துன்பங்களைப் போக்குவதற்கென்று தானே இந்த மண்ணில், இயற்கையுடன் எழில் பொங்கும் இந்த ஆற்றங்கரையில் நாடிவந்து குடிகொண்டுள்ளான்.

"யாமிருக்கப் பயமேன்" என்ற இறைவாசகம் ஒரு அரசபிள்ளைக்கு மட்டுமா பொருந்தக்கூடியது! துன்பத்தால் துவண்டு தன்னை நாடிவருகின்ற ஆயிரக்கணக்கான அரசபிள்ளைகளுக்கெல்லாம் இன்றும் சந்நிதியான் அபயமளித்துக் கொண்டுதானே இருக்கின்றான்.

அவனது கருணைக்கும் அளவுண்டோ?
அவனது கருணையே கருணை!

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஐந்து

தும்பளை தெற்கு, தும்பளை. என்ற முகவரியில் வாழ்ந்துவரும் திரு. வீரகத்தி வடிவேல் அவர்களுக்கு தற்பொழுது வயது 66. களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஓர் அன்பர்.

தனக்கு அறிவு தெரியத்தொடங்கி ஆலய வழிபாடு செய்ய ஆரம்பித் காலத்திலிருந்து இன்றுவரை சந்நிதியானுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்து வருகின்றார்.

ஆலயத்திற்கு நடந்து சென்று வழிபாடு செய்தலே சாலச்சிறந்தது என்று அறிவுரை கூறுகின்ற யோகர்சுவாமிகளினது கருத்துக்கிணங்க தும்பளையிலிருந்து நடந்து வந்து சந்நிதியானைத் தரிசிக்கும் வழக்கத்தை இளமைக் காலத்திலிருந்து திரு.வீ. வடிவேல் அவர்கள் முடிந்தவரை கடைப்பிடித்து வருகின்றார்கள்.

கல்வி கற்கும் காலத்திலும் அரச ஊழியராகத் தூர இடங்களில் வேலை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்ட காலங்களிலும் தற்பொழுது ஓய்வு பெற்று வாழ்ந்து வருகின்ற காலத்திலும் தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் எது நடந்தாலும் அது சந்நிதியானின் திருவருளே என்றும், அவனது பாதங்களைப் பணிவதனூடாகத் தான் தனக்கு நிம்மதியும் மனநிறைவும் ஏற்படுகின்றன என்ற நிலையில் வாழ்ந்து வருபவர் திரு.வீ. வடிவேல் அவர்கள்.

நிற்பதும் நடப்பதும் நின்செயலாலே நினைப்பதும் நிகழ்வதும் நின்செயலாலே... என்று தொடருகின்ற பக்திப் பாடல் வரிகளில் வருவது போன்று எல்லாம் கலயுகக் கந்தன் திருவருட்படியே நடக்கின்றன என்ற நம்பிக்கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி முருகனை மனதில் நிறுத்தி வாழ்ந்து வருகின்ற ஒரு அன்பரே திரு. வீ. வடிவேல் அவர்கள் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இத்தகைய இயல்புள்ள திரு. வடிவேல் அவர்களுக்கு அண்மையில் அடி வயிற்றில் பலமாகக் குத்துகின்ற ஒரு வியாதி ஆரம்பித்தது. இந்த வயிற்றுக்குத்து மிகவும் கடுமையானதாகவும், தாங்க முடியாத அளவு வேதனையையும் கொடுத்ததனால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்றார். அங்கே அவருக்கு சகலவிதமான பரிசோதனைகளும் செய்யப்பட்டன. பரிசோதனையில் கல்சியக்கல்லு சலப்பையில் இருப்பதாகக் கூறிய வைத்தியர்கள் அந்தக்கல்லு இருக்கும்வரை வயிற்றில் குத்து இருக்குமெனவும் ஆகவே அந்தக் குத்தைக் குணப்படுத்த வேண்டுமானால் சத்திரசிகிச்சை செய்து கல்லை எடுப்பதுதான் ஒரே வழி எனவும் ஆலோசனை கூறினார்கள். மாற்று வழி இல்லாத நிலையில் சலப்பையில் உள்ள கல்லைச் சத்திர சிகிச்சை செய்து எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்குரிய திகதியும் 31.12.1999 எனக் குறிக்கப்பட்டது.

சந்நிதி ஆலயத்தில் வெள்ளிதோறும் நடைபெறும் பஜனைக் குழுவில் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்து பஜனை பாடுதல், சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி மாதம் தோறும் வரும் பௌர்ணமித் தினத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாசக முற்றோதலில் தானும் தவறாது பங்குகொண்டு தனது இறைபணியை நிறைவேற்றுதல் போன்ற கைங்கரியங்களை நிறைவேற்றி வரும் திரு. வடிவேல் அவர்கள் தனக்கு இடம்பெற இருக்கின்ற சத்திர சிகிச்சையைப் பற்றிச் சிந்திக்கின்ற அதேநேரம் கடந்த காலங்களில் ஏற்பட்ட சில நிகழ்வுகளையும் ஒரு முறை மனதில் மீட்டுப் பார்த்தார்கள்.



289485

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 ஆம் ஆண்டு திரு. வடிவேல் அவர்கள் வவுனியாவில் விவசாயக் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அந்நிய இராணுவமான இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம் மிகவும் மிலேச்சத்தனமான முறையில் யார், எவர் என்று சிந்தியாது அனைத்துத் தரப்பினரையும் தாக்குவது அவர்களது பொதுவான இயல்பு. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைத்தியர்கள், தாதிகள், நோயாளர்கள், சிறுவர்கள் என்று பார்க்காமல் வைத்தியசாலைக்குள்ளேயே அனைவரையும் சுட்டுப் பொசுக்கிய சோக நிகழ்வை நாம் இலகுவில் மறக்க முடியுமா?

இவ்வாறான இயல்புள்ள இந்திய இராணுவத்திற்கு வவுனியாவில் ஒருமுறை ஆத்திரமூட்டும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அந்தச் சமயத்தில் வவுனியா வைத்தியசாலை அதிகாரியைச் சுட்டுக்கொன்றதுடன் பலரையும் தாக்கி சித்திரவதை செய்யும் செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபட்டனர். அந்தச் சமயத்தில் வவுனியாவில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. வடிவேல் அவர்களும் இந்திய இராணுவத்தின் கைகளில் அகப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு அவர்களிடம் அகப்பட்ட நிலையில் அவருக்கு முதலாவது அடி வீழ்ந்தது. தொடர்ந்து இரண்டாவது அடியும் வீழ்ந்தது. அடியை அவரால் தாங்க முடியவில்லை அதுமட்டுமல்ல அவர் நிலை தடுமாறி அவரது நினைவு மறைய ஆரம்பித்தது. இந்த நிலையில் மூன்றாவது அடியை எதிர்கொள்ள முடியாது அவரது உள்ளம் ஆபத்தனவனாகிய முருகப் பெருமானை நினைத்து முருகா... சந்நிதி முருகா என்று கத்தினார். அவருக்கு அடிப்பதற்கு ஓங்கியவருடைய கையில் இருந்த பொல்லு கூரையில் தடக்கியது. வடிவேல் அடியில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிக்கொண்டார். அதுமட்டுமன்றி பின்பு அவருக்கு எந்தவிதமான சிறிய சித்திரவதையும் இடம்பெறாமற் காப்பாற்றப்பட்டார்.

மேற்படி சம்பவத்தை நன்றிப் பெருக்குடன் உள்ளத்தில் மீட்டுப் பார்த்த திரு. வடிவேல் அவர்கள் தற்பொழுது சத்திரசிகிச்சையை செய்வதற்கு வைத்தியசாலைக்குச் செல்வதற்கு முன்பு எப்படியும் சந்நிதியானிடம் சென்று அவனை வழிபட வேண்டுமென்று அவரது உள்ளம் திரும்பத் திரும்பச் சிந்திக்கத் தொடங்கியது.

இந்நிலையில் தனது உடல் நோயையும் பாராது திரு.வீ. வடிவேல் அவர்கள் சந்நிதி ஆலயத்திற்கு சென்று அங்கே மூன்று நாட்கள் தங்கி தினமும் பூசை நேரங்களில் தவறாது பூசைகண்டு சந்நிதியானின் தீர்த்தத்தை அருந்தி விபூதி தரித்து உள்ளம் உருகி வழிபாடு நடாத்தியதுடன் காவடி எடுப்பதற்காக நேர்த்தியும் செய்தார்கள்.

என்ன ஆச்சரியம் இரண்டாம் நாள் இரவு திரு. வடிவேல் அவர்களுக்குச் சந்நிதிமுருகன் கனவிலே காட்சி தந்து அபயம் அளித்தார்கள். அந்த ஆனந்தக் காட்சியின் நினைவுடன் காலை நித்திரைவிட்டு எழுந்தார். அன்றைய பகல் பொழுதுடன் வயிற்றுக்குத்து குறைவடைந்தது. 3ம் நாளுடன் அவருடைய வேதனை முழுமையாகச் சுகமடைந்தது. இதன் பின்பு ஒரு மாதம் கடந்து வைத்தியசாலைக்குச் சென்ற பொழுது இதுவரை சரியாக எஸ்ரேக்கு தென்படாதிருந்த கல் சரியாக இனங்காணப்பட்டு மிக எளிதாககக் கல் அகற்றப்பட்டது. தற்பொழுது எந்தவிதமான நோய்களுமின்றி வாழ்ந்துவரும் திரு. வடிவேல் அவர்கள் தனது குடும்பத்தில் எதிர்நோக்க வேண்டி இருந்த பல மோசமான கஷ்ரங்களிலிருந்து சந்நிதியான் தன்னைக் காப்பாற்றி வருவதனைக் கண்களில் கண்ணீர் ததும்ப எடுத்துக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தூய்மையும் அதன் புனிதமும் சாதாரணமானவர்களால் புரிந்துகொள்ள முடியாது போகலாம். ஆனால் யோகர்சுவாமிகள் போன்ற ஞானிகளாலும் துறவிகளாலும் அது உணரப்பட்டு வந்துள்ளது. இதனால்தான் புனிதமான சந்நிதி ஆலயத்தில் தனது பாதங்களை வைப்பதற்கு தனது மனம் கூசுகின்றது என யோகர்சுவாமிகள் தனது சீடர்களுக்கு ஒருமுறை தெரிவித்திருந்தார்.

இத்தகைய புனிதமான ஆலயத்திலிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சந்நிதி முருகன் திரு.வீ. வடிவேல் அவர்களுக்கு நிகழ்த்திய அற்புத நிகழ்வில் அதிசயம் தான் உண்டோ.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாம்பு வாகனத்தில் சந்நிதியான் வீதியுலா வருகின்ற பரவசக் காட்சி - 2012



பாம்பு வாகனத்தில் வீதி உலா வருகின்ற சந்நிதியானுக்கு அடியார்கள் அரோகரா! அரோகரா! என கோஷமெழுப்ப ஆ. சிவசண்முகஐயர் உணர்ச்சிப் பெருக்குடன் தீபாராதனை செய்கின்ற அற்புதக் காட்சி - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆறு

09.03.2001 வெள்ளிக்கிழமை. அது விடுமுறை நாளாகவும் இருந்தது. ஆலயத்தில் அடியார்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. காலைப்பூசை முடிவடைந்து மதியப் பூசைக்காக அடியார்கள் ஆலயத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

விடுமுறை நாளாகையால் வழமையான அடியார்கள் கூட்டத்துடன் அரச உத்தியோகத்தர்களும் மற்றும் தூர இடத்திலிருந்து வருபவர்களுமாகச் சேர்ந்து திருவிழாக் காலங்களைப் போன்று ஆலயச் சூழலில் அடியார்கள் கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

இவ்வாறான விடுமுறை நாட்களில் சந்நிதியில் விசேஷ அபிஷேகங்கள் நடப்பது வழக்கம். அன்றும் விடுமுறை நாளாகவும், வெள்ளிக்கிழமையாகவும் இருந்ததால் மதியப்பூசைக்கு முன்பு அபிஷேகம் சிறப்பாக இடம் பெற்றுக்கொண்டிருந்தது.

திரு.ஆ.விஸ்வலிங்கம் அவர்கள் சந்நிதியானுடைய உண்மையான பக்தன். சுன்னாகம் மயிலணி என்னும் விலாசத்தில் குடியிருக்கின்றவர். ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர். அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் விவசாயப் பொருட்கள் விற்பனை செய்யும் தனியார் கடை ஒன்றில் சுன்னாகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

மதிய பூசையில் வழிபாடு செலுத்தச் சென்ற திரு.ஆ. விஸ்வலிங்கம் அவர்களுக்கு அபிஷேக நிகழ்விலும் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததால் மிக மகிழ்ச்சியுடன் அதில் கலந்துகொண்டிருந்தார். அமைதியாகவும் அடக்கமாகவும் சந்நிதியானை வழிபடுகின்ற திரு.ஆ. விஸ்வலிங்கம் அவர்கள் அபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற மதிய பூசையிலும் மெய்மறந்து பங்குபற்றிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை ஒருநிலைப்படுத்தி பக்திப் பரவசத்தில் மூழ்கிப்போயிருந்த திரு.ஆ. விஸ்வலிங்கம் அவர்கள் பூசை முடிவடைந்த பின்பும் அந்தப் பக்கிநிலையில் இருந்து விடுபட மனமில்லாதவராய்ச் சந்நிதியானின் வாயிலிலே அவரின் நாமங்களை உச்சரித்தாறு வழிபாடு செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவருடைய மனதில் ஓர் விருப்பம் தோன்றியது. சந்நிதியானை திருப்தியாக வழிபட்டது போன்று அவனுக்குப் படைக்கப்பட்ட நைவேத்தியத்தையும் அருந்த வேண்டுமென்ற ஆவல் அவருடைய மனதிற்குள் அலைமோத ஆரம்பித்தது. ஆம்! மருந்து என அழைக்கப்படும் ஆலம் இலையில் படைக்கப்படும் அமுதினையும் மோதகத்தினையும் அருந்தவேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது.

ஆலயத்திற்கு அடியவர்களில் ஒருவராகச் சென்று சிறப்பாக வழிபாட்டை முடித்துவிட்ட நிலையில் தனக்கு ஏற்பட்ட இந்த விருப்பம் அல்லது ஆசை ஒரு விபரீத விருப்பமோ என்று அவருடைய மனம் ஒருமுறை சிந்தித்தாலும் அடிமனத்திலிருந்து அதனை அகற்ற முடியாதவராகவும் அவர் காணப்பட்டார்.

சந்நிதியானே! ஏதோ இன்று உன்னுடைய நிவேதனப் பொருட்களை அருந்த வேண்டுமென்று எனது உள்ளம் விரும்புகின்றதே அதனை நீதானப்பா நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று சந்நிதியானிடம் வேண்டியவாறு சிறிதுநேரம் தியானத்தில் மூழ்கிப் போனார்.

சொற்ப நேரத்தில் இந்தாருங்கள் ஐயா! என்று ஒரு பெண் அவருடைய கைகளிலே பிரசாதத்தை வழங்குகின்றார். எம்பெருமானுடைய தியானத்தில் மூழ்கிப் போயிருந்த திரு. விஸ்வலிங்கம் அவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதைச் சிந்திக்க முடியாத நிலையில் மெய்சிலிர்த்துக் கொண்டவாறு பிரசாதத்தைப் பெற்றுக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாதத்தைக் கைகளில் பெற்றுக் கொண்டவர் அதனை நன்றாகக் கவனிக்கின்றார். கவனித்தவர் மேலும் அதிசயத்துக்குள்ளாகின்றார். அவருடைய கண்களை அவரே நம்பமுடியவில்லை ஆம்! சந்நிதியானிடம் வேண்டியது போலவே பச்சையரிசி அமுதும், மோதகங்களும் அதற்குள் காணப்படுகின்றன. உள்ளம் உருகக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியவாறு சந்நிதியானின் திருவிளையாடலை நினைத்த வண்ணம் பெற்றுக்கொண்ட பிரசாதங்களை ஆலயத்தின் வாயிலில் இருந்த வண்ணமே விஸ்வலிங்கம் அவர்கள் அருந்த ஆரம்பித்தார்கள்.

நடந்து முடிந்த அற்புத நிகழ்வுகளில் இருந்து விடுபடமுடியாது உள்ளத்தில் பொங்கி எழுகின்ற ஆனந்தக் களிப்பில் மூழ்கிப் போயிருந்த திரு. விஸ்வலிங்கம் அவர்கள் ஒன்றை மட்டும் உணர்ந்து கொண்டார்கள். ஆம்! தெய்வ கைங்கரியம் என்றால் என்ன என்பதை அன்று பூரணமாக உணர்ந்து கொண்டார்கள்.

அன்று ஆலயத்தில் அபிஷேகத்திற்கு உபயகாரராக இருந்த பெண்ணே தனக்கு பூசை முடிவடைந்த பின்பு பிரசாதத்தை வழங்கியுள்ளார் என்பதை திரு. விஸ்வலிங்கம் அவர்கள் அறிந்து கொண்டார்கள். அந்தப் பெண்ணினூடாகத் தான் விரும்பிய நேரத்தில் விரும்பிய பிரசாதங்களைத் தனக்குக் கிடைக்கச் செய்த சந்நிதியானின் திருவிளையாடலை அனுபவிக்கக் கிடைத்த பேற்றை எண்ணி உள்ளம் குளிர்ந்தார்கள்.

ஆச்சிரமத்துடன் நீண்டகாலத் தொடர்புள்ள அன்பரான திரு. விஸ்வலிங்கம் அவர்கள் அன்றைய தினமே ஆச்சிரமத்திற்குச் சென்று நடந்த சம்பவத்தை ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு நன்றிப் பெருக்குடன் எடுத்துக் கூறிவிட்டு ஆற்றங்கரையானின் அற்புத உணர்வுடன் வீடு திரும்பினார்கள்.

**உண்மையான அடியவர்களின் உள்ளங்கள் சந்நிதியானின் உறைவிடங்கள் அல்லவா!**

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஏழு

அன்று வெள்ளிக்கிழமை மே மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை. மதியநேரப் பூசை முடிவடைந்து தீர்த்தம், திருநீறு, சந்தனம் மற்றும் மருந்து என அடியார்களினால் அழைக்கப்படும் ஆலம் இலையில் படைக்கப்பட்ட அமுது என்பவற்றைப் பெற்றுக்கொண்ட அடியார்கள் பூசையை நிறைவாகக் காணமுடிந்த மன மலர்ச்சியுடன் ஆலயத்திலிருந்து திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு பூசையை நிறைவாக முடித்துக்கொண்ட அடியார்கள் பலவகைப்பட்ட சிந்தனைகளுடன் வீடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் ஆலயத்தின் வடகிழக்குத் திசையில் எரிந்து சிதைவடைந்த தேரின் எச்சங்கள் காணப்படுகின்ற அந்த இடத்தின் மத்தியில் முருக நாமங்களைக் கம்பீரமாக உச்சரித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் காணப்பட்ட ஒரு அன்பரை நோக்கி அனைவரது கவனங்களும் ஈர்க்கப்பட்டன.

உண்மையில் ஆலயத்திலிருந்து வெளியேற ஆயத்தமானவர்களை மட்டுமன்றி ஆலயத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தவர்களின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அந்த அன்பரின் செயற்பாடுகள் காணப்பட்டன. அவரது வாய் முருக நாமங்களைச் சொல்லிக் கொண்டிருந்த அதேவேளை அவரது முகத்திலும் பல்வேறு பாவனைகள் தோன்றி மறைந்து கொண்டுதான் இருந்தன. அதுமட்டுமல்ல அவரது இடது கையில் ஒரு முழுவெற்றுப் போத்தலை வைத்திருந்த அதேவேளை, வலது கையிலும் அதே போன்ற ஒரு போத்தலை வைத்துக்கொண்டு அதனை முன்னும் பின்னுமாக அசைத்துக் கொண்டிருப்பதையும் காணமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அவ்வாறு கையில் போத்தலை வைத்துக் கொண்டு அதனை முன்னும் பின்னும் அசைத்துக் கொண்டிருப்பதை பார்த்தவர்களுக்கு விளங்கிவிட்டது அவர் அதை ஏதோ செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றார் என்பது.

அங்கே கூடியிருந்து பார்த்துக் கொண்டிருந்த அடியார்களது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. மெதுவாக முன்னும் பின்னும் கைகளால் அசைத்துக் கொண்டிருந்த போத்தல், சிறிது சிறிதாக வேகமாக அசையத் தொடங்குகின்றது. அதேபோல மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்த முருகநாமம் பலத்த சத்தத்துடன் ஓம் முருகா! என ஒலிக்குகையில் வைத்து அசைத்துக் கொண்டிருந்த போத்தலை வேகமாக தனது வெண்தலையில் ஓங்கி அடிக்க போத்தல் சுக்குநூறாக சிதறி எங்கும் பரவியது.

எல்லோரும் இந்தக் காட்சியை வைத்தகண் வாங்காது பார்த்து மெய்சிலிர்த்த வண்ணம் காணப்பட்டனர். சிறிது நேரத்தில் இடதுகையில் இருந்த போத்தலை மீண்டும் வலது கைக்கு மாற்றி முதல்த்தடவை செய்தது போல இரண்டாவது தடவையும் மற்றைய போத்தலைத் தனது தலையில் வேகமாக அடித்து சுக்குநூறாக்குகின்றார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அடியார்கள் தமது கண்களுக்கு முன்னால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அந்தக் காட்சியால் வியப்படைந்து காணப்பட்டனர். போத்தலைத் தலையில் அடித்து சுக்குநூறாக்கிய அந்த முருகன் அடியாருக்கு எவ்வித காயங்களோ உடல் வலியோ ஏற்படவில்லை. அதுமட்டுமன்றி அவரது முகத்தில் மேலும் மகிழ்ச்சியையும் அந்த மகிழ்ச்சியினால் ஏற்பட்ட சிரிப்பையுமே காணமுடிந்தது.

ஆம்! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மத்தியானப் பூசை முடிவடைந்த பின்பு அடியார்கள் சந்நிதியில் இந்தக் காட்சியை அண்மைக்காலமாகக் கண்டு வருவது இயல்பாகிவிட்டது. சில வேளைகளில் இரும்புக் கம்பியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பின் பல பாகங்களிலும், தலையிலும் ஓங்கி அடிக்கின்ற செயற்பாடுகளில் அவர் ஈடுபடுவதையும் காணமுடியும்.

இவ்விதமான செயற்பாடுகள் புத்திசுவாதினம் அற்றவர்கள், புத்தி பேதலித்துப் போனவர்கள் போன்றோர் செய்கின்ற செயற்பாடுகள் என்று நாம் நினைக்கக்கூடும். அவ்வாறு நாம் நினைப்போமானால் செல்லப்பா சுவாமிகளைப் பார்த்து விசர்ச் செல்லப்பா என்று சொன்ன வரலாறாகத்தான் அது முடியக்கூடும்.

மேற்படி சித்துக்களைச் செய்கின்ற அன்பரது சொந்த இடம் கைதடி. திருமணமாகிய இவருக்கு நான்கு பிள்ளைகளும் இருக்கின்றனர். கதிர்காமத்திற்கு தலயாத்திரை செய்து வந்ததாகவும் அறியப்படுகின்றது. பல ஆலயங்களுக்கும் சென்று வருகின்ற இவர் சந்நிதி முருகன் மேல் அளவிடமுடியாத பக்தி கொண்டுள்ளார். வெள்ளிக்கிழமை மற்றும் விசேட தினங்களில் சந்நிதியானிடம் வருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். சராசரி அடியார்களில் ஒருவராக நாம் இவரைக் கருத முடியாது. அசாதாரணத் தன்மைகள், அசாதாரண இயல்புகள் கொண்ட ஒரு முருக பக்தன் என்பதையே தற்பொழுது எம்மால் உணரமுடிகின்றது. அவரின் பக்தி நிலையையும், பக்குவத்தையும் அளவிட்டு அறிகின்ற தகுதியும், பக்குவமும் எமக்கு இல்லை என்றே கூறவேண்டும்.

கடந்த சில வருடங்களாக சந்நிதி ஆலயத்தில் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த முருக பக்தரை உற்சவகாலம், கந்தசஷ்டிகாலம் என்பவற்றிலெல்லாம் அடியார்க்ள் சந்தித்திருக்கக்கூடும். சுவாமி வீதி உலா வருகின்ற பொழுது சுவாமியுடன் சேர்ந்து வருகின்ற வழக்கம் இவரிடம் காணப்படுகின்றது.

இறுதியாக 27.03.2001 செவ்வாய்கிழமை சங்காபிஷேகம் இடம்பெற்ற அன்று பிற்பகல் 2.30 மணியளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமான் வீதிவலம் வந்துகொண்டிருந்தபொழுது மேற்படி முருக பக்தர் சுவாமியுடன் சேர்ந்து வந்துகொண்டிந்தார்கள்.

அன்று வீதிவலம் வந்துகொண்டிருந்த வேலவனை வைத்த கண் வாங்காது அவரையே பார்த்தபடி அவர்மேலேயே முழுக்கவனத்தையும் செலுத்தி, தனது உடலை வருத்தி வழிபாடு நடத்திக்கொண்டிருந்ததை அனைத்து அடியார்களும் காணமுடிந்தது. உண்மையில் இவரது செயற்பாடுகளைப் பார்த்து கொண்டிருந்த ஏனைய அடியார்களின் பக்திநிலையை ஒருபடி உயர்த்துவதற்குக் காரணமாக அமைந்தது எனக் கூறலாம்.

கொதிக்கும் வெயிலில் மணலைக் குவித்து அந்த மண் குவியலின் மேல் இருந்து வேலவனை வணங்குதல், தனது கைகளினால் அபிநயம் செய்து காட்டுதல், சில வேளைகளில் தனது உடலை வளைத்தல், தலையைச் சாய்த்தல், கைகளால் அபிநயம் செய்தல் ஆகிய அம்சங்களைளும் ஓரே நேரத்தில் செயற்படுத்தி முருகனை வழிபடுவது பார்ப்பதற்கு வியப்பாகவே இருந்தது.

மேலும் கொழுத்தும் வெயிலில் சூரியனையும் எழுந்தருளி வந்து கொண்டுவந்துகொண்டிருக்கும் வேலவனையும் மாறிமாறி உற்றுப் பார்ப்பது, அடியார்கள், கால் மிதிக்க அஞ்சும் அந்தக் கொழுத்தும் வெயிலில் சயன நிலையில் இருந்தவாறு வேலவனை வணங்குவதெல்லாம் பக்தியின் உச்ச வெளிப்பாடாகவே தென்பட்டது.

சந்நிதியில் அடியார்கள் வெளிப்படுத்துகின்ற பக்தி உணர்வு, பக்தி முறைகளெல்லாம் பார்ப்போரை பரவசப்படுத்தவல்லவை என்பது இன்று மட்டும் நடக்கின்ற புதுமைகளா? அவை இங்கே என்றும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் எட்டு

சந்நிதியில் அடியார்கள் வழிபாடு செலுத்துகின்ற முறைகள், அங்கே அவர்கள் பெற்றுக்கொள்கின்ற மத அனுபவங்கள் மட்டுமன்றி அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பூசை முறைகள் கூட ஏனைய ஆலயங்களில் மேற்கொள்வதைவிட பல வகையிலும் வேறுபட்டவைகளாக காணப்படுகின்றன.

சந்நிதியில் மேற்கொள்ளப்படுகின்ற பூசைமுறை வாய்கட்டி மேற்கொள்ளப்படுகின்ற மௌனப்பூசை என மேலோட்டமாகக் கருதினாலும், ஒவ்வொரு நாளும் பூசை நடைபெறுகின்ற நிகழ்வினை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அங்கே இடம்பெறும் பூசைமுறைகளின் சிறப்பையும், அந்த பூசை முறைகளில் உள்ள புனிதத்தையும், அங்கே இடம்பெற்றுவரும் தனித்துவத்தையும், பூசகர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தூய்மையினையும் நாம் ஓரளவு உணரக்கூடியதாக உள்ளது.

தற்பொழுது சந்நிதியில் பூசையை நடாத்துபவர்கள் மருதர் கதிர்காமருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மருதர் கதிர்காமரை சந்நிதிமுருகன் ஆட்கொண்டு தனக்கு பூசை செய்யுமாறு கேட்டபொழுது மருதர் கதிர்காமர் தனக்கு பூசை முறைகள் எதுவும் தெரியாதென்றும், பூசை நடாத்துகின்ற பக்குவம் தனக்கு இல்லையெனவும் மறுப்புத் தெரிவித்தபொழுது மருதர் கதிர்காமரை கண்களை மூடுமாறு கூறி கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று அங்கே நடைபெறும் பூசை முறைகளைக் காண்பித்து அதன்படியே சந்நிதியிலும் பூசைகளை நடாத்துமாறு வேண்டிக்கொண்டதற்கு இணங்க பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் அடியார் அறிந்த விடயங்களே. தொண்டைமானாற்றைச் சேர்ந்த 90 வயதுடைய ஓய்வுபெற்ற வைத்தியர் திரு. கிருஷ்ணசாமி அவர்களிடமிருந்து பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலின்படி இவ்வாறு சந்நிதியில் வாய்கட்டி பூசை நடைபெற ஆரம்பித்த திகதி 30.05.1840 என்பதை அறிய முடிகின்றது.

சந்நிதியில் தினப் பூசைக்குரியவர்கள் முதல்நாளே அந்தப் பூசைக்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிவிடுவார். அங்கே 65 ஆலம் இலைகளில் அமுது படைப்பதென்பது தினம்தோறும் இடம்பெறும் நிகழ்வாகும். மிகவும் சாதாரணமாக இடம்பெறும் பூசை நாட்களிலும் இவ்வாறு பெருந்தொகை அமுது படைப்பதும் அதில் ஒரு பகுதியை ஆலயத்தில் இருப்பவர்களுக்கும் அடியார்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதும் வழமையான விடயங்கள். இந்த வகையில் பூசைக்குரியவர்கள் இதுபோன்ற ஆயத்தங்களை முதல் நாளே செய்து முடிக்க வேண்டியது அவர்களது கடமையாக உள்ளது.

இத்தகைய ஆயத்தங்கள் எல்லாம் செய்து முடித்த பின் அன்றைய தினம் பூசை வைக்கின்ற பூசகர் அதிகாலையில் எழுந்து வீட்டில் தோய்ந்தபின் பூசை நேரத்தில் அணிவதற்கான வேட்டி, சால்வை, தலைக்கு கழுத்திற்கு அணிவதற்கான உருத்திராக்க மாலை என்பனவற்றை இதற்கென விசேடமாக இழைத்த ஓலைப் பெட்டிக்குள் வைத்தே ஆலயத்திற்கு எடுத்துச் செல்கின்றனர். இந்தப் பெட்டி பட்டுச் சீலைப் பெட்டி என அழைக்கப்படுகின்றது.

ஆலயத்தில் சாதாரண நாட்களில் மூன்று பூசைகளும் விசேட தினங்களில் தேவையைப் பொறுத்து ஐந்து பூசைகளும் ஒரு நாளில் இடம்பெறும். எத்தனை பூசைகள் இடம்பெற்றாலும் ஒவ்வொரு பூசைக்கு முன்பும் நீராடிய பின்பே பூசை வைக்கும் வழக்கம் இங்கே கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆலயத்தின் வடமேற்கு மூலையில் உள்ள அறையில் பூசகர்கள் நீராடுவார்கள். வீட்டில் இருந்து வருகின்ற பொழுது தோய்ந்துவிட்டு வருகின்ற பூசகர்கள் ஆலயத்திற்கு வந்த பின்பு ஒவ்வொரு பூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கும் முன்பும் இவ்வாறு நீராடுவது கட்டாயமான கடைமையாக உள்ளது.

பூசையை நடாத்துகின்ற பொழுது அதிகமான பூசகர்கள் எளிமையான முறையில் தான் உடை அணிவார்கள் ஆனாலும் தலையிலும் கழுத்திலும் உருத்திராக்க மாலை அணியத் தவறமாட்டார்கள். மேலும் மௌனப் பூசைக்கு அடையாளமாக வாயை மூடிக் கட்டியிருப்பார். இதற்குப் பயன்படுத்துகின்ற துணியை மூக்குத்துண்டு என அவர்கள் அழைக்கின்றனர். இவற்றுடன் இந்துசமய முறைப்படி உடம்பின் பல்வேறு பகுதிகளில் திருநீறு அணிகின்ற வழக்கத்தையும் கடைப்பிடிக்கின்றனர். இத்தகைய ஆயத்தங்களுடனும் அம்சங்களுடனும் பூசையை ஆரம்பித்து நிறைவேற்றுகின்ற அந்தப் பூசகர்கள் ஒவ்வொருவரும் அந்த சூழலில் தம் உள்ளமும், உடலும் பரிசுத்தமான ஒருநிலையில் இருப்பதாகவே உணர்கின்றனர்.

மௌனமாக சந்நிதியில் பூசகர்களால் பூசை நிறைவேற்றப்படுகின்ற பொழுதிலும் அந்தப் பூசையில் பங்குகொள்கின்ற சந்நிதியானின் பக்தர்களது உள்ளத்தில் ஏற்படும் பக்திப் பரவசம் தனித்துவம் நிறைந்ததாகவே உணரப்படுகின்றது. அந்த உணர்வும், உறவும் எங்கேயோ இருக்கின்ற இறைவனுடன் ஏற்படுத்துகின்ற ஒரு உறவாக இல்லாமல் எமக்கு அருகில் காணப்படும் ஒரு நெருங்கிய ஒரு உறவுமுறை உள்ளவருடன் ஏற்படுத்துகின்ற ஒரு உறவுமுறை போன்று மிக நெருக்கமான, இறுக்கமான ஒரு பக்தி உணர்வை சந்நிதியானின் பக்தர்களது உள்ளத்தில் ஏற்படுத்துவதாக உணரப்படுகின்றது.

மருதர் கதிர்காமர் தான் அடியார்களுக்கு எவ்வாறு திருநீற்றை வழங்குவது என்று கலங்கி நின்றபொழுது சந்நிதி முருகன் திருநீற்றுத் தட்டை கதிர்காமரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்குமாறும் அடியார்களுக்கு திருநீறு வழங்கும் செயலை தானே மேற்கொள்ளுவதாகவும் வாக்குக் கொடுத்திருந்தார். அதன்படியே மருதர் கதிர்காமர் திருநீற்றுத் தட்டை கையில் எடுத்ததாகவும் திருநீறு வழங்கும் செயலைச் சந்நிதியானே தோன்றாத் துணையாக நின்று செயற்படுத்தினார் என்றும் நம்பப்படுகின்றது. ஆம்! சந்நிதியில் இன்றும் இடம்பெற்று வரும் நடைமுறைகள் மேற்படி நிலைமைகளை எமக்கு வெளிப்படுத்துபவையாகவே அமைந்திருப்பதை எம்மால் உணரமுடிகின்றது.

பூசை முடிவடைந்து மூலஸ்தானத்திலிருந்து திருநீற்றுத் தட்டுடன் வருபவர் பூசகர் அல்ல சந்நிதியான்தான் பூசகர் வடிவத்தில் வருகின்றார் என்ற நம்பிக்கை இன்றும் பேணப்படுகின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே பூசகருடைய பாதங்களைத் தொட்டு வணங்குதல் அல்லது அவருடைய பாதங்களில் விழுந்து வணங்குதல் என்ற வழமை உணர்வு பூர்வமாக இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

பூசை முடிவடைந்த நிலையிலும் திருநீறு வழங்குகின்ற செயற்பாட்டையும் பூசையின் ஒரு அங்கமாகவே நினைத்துப் பூசகர்கள் நிறைவேற்றி வருகின்ற செயற்பாட்டை நாம் சந்நிதியிற் காணமுடியும். பூசையை நடாத்தும் பொழுது எவ்வாறு வாய்கட்டி செயற்பட்டார்களோ அதே கோலத்துடன்தான் திருநீறு வழங்குகின்ற செயற்பாட்டையும் மேற்கொள்வார்கள்.

பூசகருடைய பாதங்களைத் தொட்டு வணங்குவது மட்டுமன்றி பூசகரிடமிருந்து திருநீற்றைப் பெற்றுக்கொள்ளும் பொழுதும் தலைகுனிந்து மிகவும் பயபக்தியுடன்தான் அடியார்கள் திருநீற்றைப் பெற்றுக் கொள்வார்கள். பூசகர்களும் தாம் யாருக்குத் திருநீறு வழங்குகின்றோம் என்ற சிந்தனையை விடுத்து சந்நிதியானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் தியானித்தபடி முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது அனைத்து அடியார்களுக்கும் திருநீற்றை வழங்கிச் செல்வார்கள். மேலும் தமது பாதங்களைத் தொட்டு வணங்குகின்ற அடியார்களுக்கு அவர்களுடைய சிரசில் திருநீறு இட்ட பின்பே அவர்களின் கைகளில் திருநீறு வழங்கும் நடைமுறையையும் பூசகர்கள் மேற்கொள்வார்கள்.

ஆலயத்தின் குருவை விழுந்து வணங்குதல், குருவின் பாதங்களைத் தொட்டு வணங்குதல் என்பன பொதுவாக இன்று வேறு ஆலயங்களில் கடைப்பிடிக்கப்படாத அம்சம். ஆனாலும் சந்நிதியில் அடியார்கள் இவ்வாறு ஆலயப் பூசகருடைய பாதங்களை வணங்குகின்ற செயற்பாட்டை உண்மையான உள்ளுணர்வுடனும் உண்மையான பக்தியுணர்வுடனுமே மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி அவ்வாறு வணங்குவதன் மூலமே அவர்கள் வழிபாட்டின் முழுமையான திருப்தியையும், நிறைவையும் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும் நாம் தெளிவாகக் காணமுடிகின்றது.

ஆலயத்தின் வரலாற்றையும் அங்குள்ள நடைமுறைகளையும் அறிந்து ஆலயச் சூழலில் வாழ்கின்றவர்களும் ஆலயத்துடன் மிகக் கூடிய தொடர்புள்ளவர்களுமே கூடுதலாக இத்தகைய வழிபாட்டு முறையைக் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனாலும் இத்தகைய நடைமுறையைப் பார்த்துத் தாமும் அவ்வாறு வணங்க வேண்டும் என்று வணங்குகின்ற அடியார்களும் இங்கே காணப்படுகின்றனர்.

பெற்றோரை வணங்குதல், பெரியாரை வணங்குதல், குருவை வணங்குதல் என்பன எல்லாம் காலம் காலமாக எமது சமயத்திலும் பண்பாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற செயற்பாடுகளாக இருந்து வந்துள்ளன. எமது பண்பாட்டிலும், சமயத்திலும் பேணப்பட்டு வருகின்ற இவைபோன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த பண்பாட்டு அம்சங்களை வேற்று இனத்தவர்களும், மதத்தவர்களும் வியந்து பாராட்டியது மட்டுமன்றி எம்மைப் பின்பற்றி அவர்களும் இந்த நடைமுறைகளை கைக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.

எமது நாட்டில் சகோதர இனத்தவர்களான சிங்களவரும், பௌத்த மதத்தினரும் இன்றும் இந்த நடைமுறையைப் பின்பற்றி வருகின்றனர். அது மட்டுமன்றி பௌத்த மகா நாயக்கர்களை நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடாத்தும் உயர்நிலைத் தலைவர்களை அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி வருவதைக் காணமுடிகின்றது.

ஆனால் இந்த உயர்ந்த பண்பாட்டிற்கு மூலகாரணமாக இருந்தது மட்டுமன்றி இந்த நடைமுறைகளைப் பின்பற்றி தமது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி வாழ்ந்து வந்த எமது இனமும் மதமும் இன்று இவற்றை மறந்து செயற்படுவதுடன் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது நாகரிகமற்ற செயல் என்றும் சிந்திக்கின்றார்கள் போல் தோன்றுகின்றது.

உண்மையான ஆத்மீகவாதிகளும் மற்றும் சமூக அறிஞர்களும் மேற்கூறிய பல நல்ல பண்புகள் எமது சமயத்திலும், பண்பாட்டிலும் அருகிவருவதுதான் எமது சமூகச் சீரழிவிற்கும், குழப்பமான சூழ்நிலைக்கும் காரணமெனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் சந்நிதியில் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைகளும் பக்தியுணர்வுகளும் தனிமனித வாழ்க்கைக்கு மட்டுமன்றி சமூகத்தின் உயர்விற்கும் உதவக்கூடியவையாகும்.

சந்நிதி ஆலயம் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்துள்ள ஒரு பொக்கிசம். கலியுகக் கந்தனின் பேரருள் அங்கே பொங்கி வழிகின்றது. அங்கே இல்லாததும் எதுவும் இல்லை. கிடைக்காததும் எதுவும் இல்லை.

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஒன்பது

பாரதயுத்தம் முடிந்து பஞ்சபாண்டவர்கள் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்கள், அரியாசனத்தில் வீமன் இருக்கின்றான், வழக்கு ஒன்று சபைக்கு வருகின்றது. ஒருவர் தனது காணியை வேறொரு நபருக்கு விற்றுவிட்டார். காணியை வாங்கியவர்கள் வாங்கிய காணிக்குள் புதையல் ஒன்றைக் கண்டு எடுக்கின்றார்கள். எடுத்தவர் சிந்திக்கின்றார் இது எனக்குச் சொந்தமாக வரமுடியாது நான் காணியைத்தான் வாங்கினேன். இந்தப் புதையல் காணியை விற்றவருக்கே உரித்தானது என முடிவு செய்து அவரிடம் கொண்டுசென்று அதை ஏற்றுக்கொள்ளுமாறு கூறுகின்றார். அதற்கு அவர் "நான் எப்பொழுது காணியை விற்றேனோ அன்றிலிருந்து அந்தக் காணி தொடர்பான அனைத்தும் உனக்கே உரிமையானது ஆகவே அந்தப் புதையல் உனக்குரியதே" என்று கூறி வாங்க மறுத்துவிட்டார். இந்த வழக்கே பஞ்சபாண்டவர் அரண்மனைக்கு சென்றது. அரியாசனத்தில் இருந்த வீமன் வழக்கை வேறு ஒரு தினத்திற்கு பிற்போடுகின்றான்.

அன்று தர்மர் அரியாசனத்தில் இருக்கின்றார். அதே வழக்கு சபையில் எடுக்கப்படுகின்றது. இப்பொழுது வழக்கின் கருப்பொருள் மாற்றமடைந்துவிட்டது. புதையலை எடுத்தவன் அது தனக்கே சேரவேண்டும் ஆகவே அது தனக்கே உரியது என்று தீர்ப்பளிக்குமாறு கூறுகின்றான். காணியை விற்றவனோ இல்லை தான் காணியை மட்டும்தான் விற்றேன் புதையலை அல்ல ஆகவே உண்மையில் புதையல் தனக்கே உரியது என்றும் தனக்கு அது கிடைப்பதற்கு தீர்ப்பு வழங்குமாறு கேட்கின்றான். சபையில் உள்ளவர்கள் விழிக்கின்றார்கள். வழக்கின் கருப்பொருள் தலைகீழாக மாறியிருப்பதற்குக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டா என ஆராய்ந்த சகாதேவன் காரணத்தைக் கண்டுபிடித்து அதைச் சபையில் வெளியிடுகின்றான். ஆம்! கலியுகம் பிறந்துவிட்டது அதுதான் இந்த மாற்றம்.

கலியுகம் பிறந்துவிட்டது என்பதற்கும் கலியுகம் எப்படியிருக்கும் என்பதற்கும் கூறப்படுகின்ற பல கதைகளில் மேற்கூறிய கதையும் ஒன்று. கலியுகத்தின் அம்சங்களை நாம் இன்று நிச வாழ்க்கையிற் காணுகின்றோம். அதர்மம், நம்பிக்கைத் துரோகம், செய்நன்றிமறத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம், கலப்படம் இவைகள் இன்று மக்கள் மத்தியில் மலிந்து காணப்படுகின்றன.

மாறாகத் தர்ம காரியங்கள் தர்மமான செயற்பாடுகள் அருகிக்கொண்டே செல்வதாகப் பலரும் அங்கலாய்க்கின்றனர். அதுமட்டுமன்றித் தர்மமான காரியங்களைச் செய்பவர்கள்கூட அதில் முழுமையான நம்பிக்கை கொள்வதில் தயக்கம் காட்டுவது போலத் தெரிகின்றது. இந்தக் கலியுகத்தில் தர்மம் வெல்லுமா என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் பதிலலிக்கும் வகையிற் கலியுகக்கந்தனாம் சந்நிதியானின் . திருவருளால் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சில செயற்பாடுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து சந்நிதி ஆலயம் புனரமைக்கப்பட்டது போன்று ஆச்சிரமமும் புனரமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனென்றால் ஆலயத்தில் வழிபாடு ஆரம்பித்தால் வழிபட வருகின்ற அடியார்களின் பசியைப் போக்கவேண்டிய பணியை ஆச்சிரமம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால் இதை மேற்கொள்வதற்கான கட்டட வசதிகளோ அன்னதானத்தை மேற்கொள்வதற்கான நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளோ எதுவுமே அப்பொழுது இருக்கவில்லை. இதனால் ஆச்சிரமத்தின் சுவாமிகள் அர்ப்பணிப்பாக தன்னுடன் இணைந்து செயற்படக்கூடிய ஒரு சில அர்பர்களின் உதவியினாற் பல பிரச்சினைகள் மத்தியில் இடம் ஒன்றை வாடகைக்குப் பெற்று கட்டடங்களை சிறிய அளவில் புனரமைப்புச் செய்து அன்னதானப் பணிக்குரிய நிதியை தொண்டுள்ளம் நிறைந்த அன்பர்களிடம் நாடிச்சென்று, அதனைக் கேட்டுப்பெற்றே அன்னதானப் பணியை ஆரம்பித்தார்கள்.

இக்காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் மிகவும் கஸ்டப்பட்டே இந்தப் பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற் சிறிய அளவிலேதான் அன்னதானப் பணிகளை மேற்கொள்ளவும் முடிந்தது.

ஆனால் மயில்வாகன சுவாமிகளின் குருவருள் நிச்சயமாகத் தனது பணிகளுக்குத் துணைசெய்யும் என்ற அசையாத நம்பிக்கை அவருள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அவரது நம்பிக்கை வீண்போகவில்லை காலப்போக்கிற் பல அன்பர்கள் தாமாக நாடிவந்து பல உதவிகளைச் செய்யத் தொடங்கினர். அதுமட்டுமன்றி முருகேசு சுவாமிகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்குத் தனது பங்களிப்புக்களை வழங்க முன்வந்தார்கள். இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமம் படிப்படியாகத் தனது தொண்டினை விஸ்தரிக்க ஆரம்பித்தது.

ஆச்சிரமத்தினுடைய பணிகள் விரிவடைந்து செல்லுகின்ற காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் ஓர் அங்கமாகச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனாலும் பேரவையினுடைய பணிகளுக்கும் ஆணிவேராக ஆச்சிரமம்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆச்சிரமத்தினுடைய பணிகளும் பேரவையினுடைய பணிகளும் காலத்தின் தேவைக்கு ஏற்ப விஸ்தரிக்கப்பட்டுள்ளன. ஆச்சிரமம், ஆலயமே தஞ்சமென வாழ்ந்து வருகின்ற ஒருதொகை அன்பர்களுக்கு தினமும் உணவு மற்றும் தேநீர் வழங்குவது உட்படத் தனது அன்னதானப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் மயில்வாகன சுவாமிகளின் குருபூசை விழா, கல்வி நிறுவனங்கள் சிலவற்றின் ஆரம்பக் கல்விக்கான நிதியுதவி, கஷ்டப்பட்ட பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கான ஊக்குவிப்புச் செயற்பாடு, ஆலயமும் ஆச்சிரமும் அமைந்துள்ள கிராமத்துப் பாடசாலையின் வருடாந்த திருக்குறட் போட்டிக்கும் திருவள்ளுவர் விழாவிற்குமான பங்களிப்பு இவ்வாறு சமூகத் தொண்டாகச் செய்யவேண்டிய தேவைகள் ஏற்படும்பொழுது அவற்றை எல்லாம் ஆச்சிரமம் தான் ஆற்றவேண்டிய சேவைகளாகவே நினைத்துச் செயற்படுத்தி வருகின்றது.

இதேபோன்று பேரவை வாராந்த வெள்ளி நிகழ்வு, ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு, வருடாந்த வைகாசி விழா, கந்தசஷ்டி கால விசேட நிகழ்வுகள், உற்சவ கால விசேட நிகழ்வுகள், திருவாசக விழா, பெரியோர்களுக்கு விருது வழங்கல், மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடாத்துதல் போன்ற செயற்பாடுகளை எல்லாம் காலத்தின் தேவையாகக் கருதி மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமத்தாலோ சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினாலோ மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு பணிகளுக்குமான நிதிப்பலமோ, நிர்வாக உத்தியோகத்தர்களோ, ஆலோசனைச் சபையோ இங்கே இல்லை. இவைகள் செய்யவேண்டிய பணிகள், இவைகள் தர்மமான காரியங்கள் என்ற வகையில் இவற்றை எல்லாம் செய்து கொண்டிருக்கின்றோம். இவற்றை எப்படி செய்கின்றோம்? இவை அனைத்தையும் தொடர்ந்து செய்ய முடியுமா? என்பதைப்பற்றி நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாகச் சிந்திப்பதில்லை ஆனால் இவைகள் அனைத்தும் சிறப்பாகவே நடைபெறுவதாக நாம் கருதுகின்றோம்.

இவற்றிற்கெல்லாம் யார் காரணம்? யாருடைய பின்னணிப் பலம் உள்ளது? எவ்வாறு நடக்கின்றது? என்பதெல்லாம் வெளியில் உள்ள அன்பர்களுக்கும் தெரியாது, எங்களுக்கும் தெரியாது, ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கும் தெரியாது. ஒன்று மட்டும்தான் தெரிகின்றது ஆம் அது சந்நிதியானின் திருவருள். சந்நிதியான்தான் தோன்றாத் துணையாக இருந்து இந்தத் தர்மமான காரியங்களை வழிநடாத்திச் செல்லுகின்றான்.

தர்மம் தழைக்க வேண்டும், நல்லது நடக்க வேண்டும், உண்மை வெல்ல வேண்டும், தொண்டு தொடர வேண்டும் இவை எல்லாம் கலியுகமாம் இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்துமா? இவை நடக்குமா? இவை சாத்தியமா? என்று பலர் அங்கலாய்ப்பதை நாம் காண்கின்றோம். ஆனாலும் இவ்விதமான தர்ம காரியங்கள் சாத்தியமாகும் என்பதையே நாம் எமது அனுபவபூர்வமாக அறிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவை சாத்தியமாவதற்கு இறையருள் கைகூடவேண்டும். அத்துடன் நாம் தர்மநெறி தவறாது நடக்க வேண்டும். இவை இரண்டும் சாத்தியமானால் அனைத்தும் சாத்தியமே.

ஆகவே ஆச்சிரமமும், பேரவையும் ஏதாவது தொண்டுகள் செய்கின்றது என்றால் அது சந்நிதியானின் திருவருள் ஒன்றே தவிர வேறு ஒன்றுமில்லை. இங்கே செயற்படுபவர்கள் கருவிகளே தவிர காரணமாக நிற்பவன் சந்நிதியானே.

தர்மம் தழைப்பதாக!

289485

- ஓம் முருகா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் பத்து

தன்னைப்பற்றி மற்றவர்கள் கதைக்கின்ற கதைகளை மீண்டும் சிந்தித்துப் பார்க்கின்றார் இளம்பட்டதாரியான திரு.கி. நடராசா அவர்கள், ஏன் தம்பி இன்னும் படிப்பு முடியவில்லையே! தம்பிக்கு வேலை கிடைப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும்? ஏன் தம்பி வேலைக்கு எழுதிப்போடவில்லையோ? ஆம்! முப்பது வருடங்களுக்கு முன்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைப்பட்டதாரிப் படிப்பை முடித்துவிட்டுத் தனது கிராமத்திற்குத் திரும்பி வேலையில்லாது வாழ்ந்த குறுகிய காலத்தில் அவரது கிராமத்தவர்களால் முக்கியமாக வயது முதிர்ந்தவர்களால் விளங்கியும் விளங்காமலும் அவரைப் பார்த்துக் கேட்கப்பட்ட கேள்விகளே இங்கு தரப்பட்டுள்ளன.

30 வருடங்களுக்கு முன்பு அதாவது 1970 ஆம் ஆண்டு தசாப்தத்தில் திரு.கி. நடராசா போன்று நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் அப்பொழுது வேலை இல்லாது வருடக்கணக்காக வேலைக்காக காத்திருந்தனர். பொதுவாகப் பலர் இந்த வேலையற்ற பட்டதாரிகளை வீட்டிற்கும் நாட்டிற்கும் சுமையாகவே கருதினார்கள். இவ்வாறு நாடு முழுவதும் வேலையற்றுக் காணப்பட்ட பட்டதாரிகளைக் கணக்கெடுத்து வேலையற்ற பட்டதாரிகள் பட்டாளம் என்றும் இவர்களை அழைக்க முற்பட்டனர்.

பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மற்றும் உளவியல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிய இந்த வேலையற்ற பட்டதாரிகள் மனம் குழம்பி நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்தது மட்டுமன்றிச் சிலர் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்று தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் இடம்பெற்றன. இதனால், பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் இளைஞர் விவசாயப்படை என்ற வகையில் காடழிப்பு வேலை, மற்றும் விசுவமடு போன்ற படித்த இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் என்பன எல்லாம் ஏற்படுத்தப்பட்டன.

1970 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்து வேலை அற்ற பட்டதாரிகளில் ஒருவராக வாழ ஆரம்பித்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.கி. நடராசா அவர்களுக்குச் சந்நிதியான் ஏற்படுத்திய அற்புத நிகழ்வினை அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

திரு.கி. நடராசா அவர்கள் தனது தந்தையின் வழிநடாத்தலினால் வெள்ளிதோறும் சந்நிதிக்குச் சென்று சந்நிதியானை வழிபடுகின்ற ஒரு முருக பக்தனாக வாழ்ந்து வந்தார். அது மட்டுமன்றி சந்நிதியானே தனது வாழ்க்கைப் பயணத்தை வழிநடாத்துபவர் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. வேலையற்ற பட்டதாரிகள் அனுபவித்து வருகின்ற துன்பங்களையும் அவர்கள் வாழ்க்கையில் நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருப்பதையும் அவர்களிற் பலர் வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்றதையும் கண்ணுற்று இது போன்ற ஒரு நிலை தனக்கு ஏற்படக்கூடாது என்பதை முன் எச்சரிக்கையுடன் முடிவு செய்த திரு. கி. நடராசா அவர்கள் இறைநம்பிக்கையான ஒரு முடிவை மேற்கொண்டார்கள்.

வழமைபோல ஒரு வெள்ளிக்கிழமை சந்நிதி ஆலயத்திற்குச் சென்று பசிக்கின்ற ஒரு குழந்தை எவ்வாறு தனது தாயிடம் சென்று பாசத்துடனும் உரிமையுடனும் பசியைப் போக்க உணவைக் கேட்குமோ அதேபோன்றுதான் குலதெய்வமாக வழிபட்டு வருகின்ற சந்நிதியானிடம் தான் எதிர்நோக்கி இருக்கும் துன்பங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு, பக்தியுடனும் உரிமையுடனும் வழிபாடு நடத்தலானார்.

289485 ce



140370c

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின்
புதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. கலியுகக்
ன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும்
கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட
வுக்குட்பட்ட எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில்
பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம்
ஒருவகையில் உங்களுக்கு கிடைத்த ஒரு பேறுதான் என்பதை
னை உணர்வுடன் வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்ந்து
ள்ளமுடியும்.

– ஆசிரியர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org